KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலையம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 வரு செப்டம்பர் மீ 12உ [No. 36

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 701
2. அப்பர். (விஸ்தார கவி) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 703
3. குலசேகரர் (பிறவி வேண்டுந் துறவி) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 705
4. கண்கண்ட தெய்வம். T. N. பிச்சமணி 706
5. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்துமாலை) . 708
6. வில்லிபாரதவிளக்கம் (இராசசூயச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B.A , B.L. 711
7. கம்பராமாயணம் (பூக்கொய் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 713
8. அகப்பொருள் வரலாறு (பரத்தையிற் பிரிவு) K. இராமரத்நம் ஐயர் B. A. 714
9. அண்ட புராணம் (காபிச்சிறப்புப் படலம்) T. S. இராமசந்திர ஐயர் B. A. 716
10. வர்த்தமானம் 719

கலா நிலையம்

சுய கல்சர்.

I

189071

கல்சரின் அவசியத்தை நான்குவாரத் தலையங்கங்களில் காட்டினோம். அதன்பின் ஆறு தலையங்கங்களில், கல்சர்நிலை அடைவதற்கு ஆதாரமாகின்ற கவிதையின் தன்மையும், அக்கவிதை ஒருவர் மனத்தினின்று பிறக்குமாறும், பிறந்து மற்றவர் மனத்தைச் சேருமாறும், சேர்ந்தவர் மனத்தைத் தன்மய மாக்கிக் கொள்கின்றவாறும் வகுத்துரைக்கப்பெற்றன. இவைகளில், கடவுள்கருத்திற்கும் கல்சர்நிலைக்கும், கல்சர் நிலைக்கும் கவிதாசக்திக்கும், மற்றக் கவிதாசக்திக்கும் கடவுள்கருத்திற்கும், முறையே உளவாகும் உறவினையும், அவைகளினூடுருவிப் பிணைக்கும் தத்துவத்தையும் செப்பலுற்றோம். இவையெலாம் பொதுவகையில் பொருந்தத்தக்கன. இதன்மேல், இவ்விதம் பொதுவுறப்புகன்ற நிரந்தர வாய்மைகளையே அடிப்படையாகக்கொண்டு நம்மனோர் தனித்தனி இக்கல்சரை யெய்தும் நீர்மையும், எய்திவரும் ஒரு கல்சரை அளந்துகொள்ளும் வகையினையும், அதனை அவ்வவர்க்கேயன்றி யாவர்க்குமே உடைமையாகின்ற அறிவு இன்பம் அன்புநலங்களின் நேர்மையையும், எடுத்துரைக்க வேண்டியவர்களா யிருக்கின்றோம். இதுவே இங்குச் சுய கல்சர் என்று அழைக்கப்படுகின்றது. தர்மசிந்தனை, தெய்வபக்தி, புத்திவிசாலம், மனைவாழ்க்கை குடிவாழ்க்கை முதலியவைகளின் அமைதி, என்னு மிவ்வகைஅம்சங்களால் நிறைந்து பூரணமாகின்றபேற்றினை நாடி ஆன்மாவானது நாளுக்குநாள் வளர்வதற்கேற்ற முறைகள், அவரவர் தனித்தனி தொடர்கின்ற சுயகல்சர் நெறியினிற்கு ஏற்றதாகும்.

இக் காலம் எங்கெங்கும் பற்பலர் பலப்பலவிதங்களில் முயன்று தங்கள் நிலைமை நேர்மையும் மேன்மையும்அடைய வேண்டுமென மிகவருந்தியும் அந்தத்தில் யாவர்நிலையும் நேராகாதது கண்டு கையற்றுத் திகைக்கலாவது உலகறிந்ததோர் விடயமாம். இன்னபடி முடிவதுவிபரீதமன்று. வித்தொன்றுபோடத்தருவொன்று விளையாதெனும் நியாயத்திற்கு இணங்கியே இவ்வாறு முடிகின்றதென்பது சிறிது ஊன்றி நோக்கினால் தெரியவரும். அவரவர் தங்கள்தங்கள் தன்மைக்கு ஏற்ற நிலையை அடைவார்களேயன்றி, புகுத்தப்படுகின்ற நிலைமைக்குரிய தன்மைய ராகமாட்டார். ஒருவன் அடைந்துள்ள சுகம் துக்கம் என்னும் நிலைகள் அவனது அந்தரங்கத்தன்மையின் தோற்றங்கள்; அல்லது காரியங்களென்றுங் கூறலாம். எனின், இந்நிலைகளையும், அந்நிலைக்குரிய புறச்சாதனங்களையும் பற்றி விவகரிப்பதால் ஏது பயன்! மாசுபடிந்த தன் முகத்தைக் கண்ணாடியிற் பார்த்தானொருவன் முகத்தைத் துடைத்துக்கொள்ளாமல் அக்கண்ணாடியைக் கைவருந்தத் துளக்கித்துளக்கித் தன் முகத்தழுக்குத் தீர்ந்ததோவென வினவுவது போலாம் மக்கள் நிலையினைச் சீர்திருத்தச் செய்யுங் கருமங்கள் யாவும். வாய்மை மற்று யாதெனின்—மக்கள் தங்கள் நிலைமை நேர்மையும் நன்மையும் அடையவேண்டுமென்னுங் கருத்தை நீக்கித் தாங்களே நேர்மையுடையவர்களாய் நல்லவர்களாய் உயர்வதற்குரிய நினைவும் முயற்சியும் நண்ணுவதன்றோ முறை. பொதுஜன முன்னேற்றத் துறைகளில் ஊடாடுவோரிற் சிறு

பகுதியோர்க்கெனினும் இவ்வுண்மை தெரிந்திருந்திருக்கலாம். எனினும், தெரிந்தபடி முறைகளைக் கையாள்வாரைக் கணக்கெண்ண நம் ஒருகை விரல்களே மிகையாயிருக்கின்றன என்பதே குறை.

ஆதலின், செல்வம் செல்வாக்காதிகளின் மிகுதியும் குறைவும் பற்றித் தங்களுடைய நிலைமை எதுவேயாயினும், அதனைத் தாம் ஒருசிறிதும் கருதாமல், தங்களைப்பற்றியே தங்களுக்காகவே நினைத்துக் கல்சரைக் கல்சருக்காகவே ஏற்று விவகரித்தல் வேண்டும் என்றவிப் பொருளில் சுயகல்சர் என்னுந் தொடர் பொருத்தமுடையதாகின்றது. சுயராஜ்யம், சுயநயம் என்னுந் தொடர்களிற்போல் 'சுய' என்னுஞ் சொல், மற்றவர்களிடமிருந்து ஒன்றை நாம், உரிமை என்ற எண்ணத்திலோ, பெருமவாவினாலோ, அடையவேண்டும் என்னும் கருத்தை இச் 'சுயகல்சர்' என்னுந் தொடரில் குறித்து நிற்கவில்லை யென்பது வெளிப்படை. மாந்தருக்குரிய உள்ளம் புறம் என்ற ஈரிடத்துள் புறநிலைநேர்மை என்பதொன்று இருக்கின்றதென்பதைப்பற்றியே நினைக்காமல், உள்ளத்தின் தன்மையைச் சார்ந்திருக்கும் விடயங்களைக் கூறுகின்ற குறிப்பினையே 'சுய' என்னுஞ்சொல் கல்சரோடு சேர்ந்திங்குப் பெறலாகின்றது.

நம்முடைய நிலைமையைத் திருத்திக்கொள்வதென்பதெல்லாம் வீண். அது நம் முயற்சியாலே முடியக்கூடிய தொன்றன்று. பெரும்பான்மை அது மற்றவர்கள் செய்கையிலும் பொருந்தியதாயிருக்கின்றது. தேடிய பொருளெல்லாம் கள்வரால் இழக்கப்பெறலாம்; கட்டிய வீடு அயலான்வைத்த தீக்கு இரையாகலாம்; பெற்றதோர் உத்தியோகம் பிறனொருவன் பொறாமைச் சூழ்ச்சியால் போகலாம். மற்று நம்மையே திருத்திக்கொள்ளும் 'சுயகல்சரோ' நம்மையே சார்ந்தது. அந்த நேர்மை, வெள்ளத்தால் வெந்தணலால் கள்வரால் அழியக்கூடியதன்று. இந்நேர்மை காத்தற்கெளியதாவதுபோன்றே ஈட்டுதற்கும் எளியதொன்றென்பதில் முழுநம்பிக்கை வைத்து நம் முழுமுயற்சியையும் அதன்பால் செலுத்தல் வேண்டும். சுயகல்சர் என்பது எவ்வெவர்க்கும் கைகூடக் காத்திருக்கின்றது. கனவு அன்று அது. மானுட இயற்கையிலேயே ஊன்றிய வேர்களை உடையது சுயகல்சர். களைகட்டு நீர் பாய்ச்சி வளர்ப்பதொன்றே வேண்டும். ஆன்மாவிற்கு உரிய இருவித சக்திகள் சுயகல்சரைச் சாத்தியமாக்குகின்றன. ஒன்று சுய ஆராய்ச்சி, மற்றது சுய வளர்ச்சி. இவ்வான்ம சக்திகளை மனத்தின் செய்கைகளாகவைத்துக் கருதினும் இவைகளின் நன்மைகளை உணருவோம். உலகப் பொருள்களையெல்லாம் ஆராய்ந்துகொள்கின்ற கருவியாகிய நம் மனம், வேண்டுமெனின் தன்னையே தான் ஆராயவுங் கூடும். இம்மனம், தன்பால் முன் நிகழ்ந்து கழிந்தனவற்றை நினைத்துப்பார்த்தும் தற்காலம்நிகழ்வனவற்றைக் கவனித்திருந்தும், தான் வயமாவது இன்னவற்றிற்கென்றும் தன்னாலாற்றவல்லது இன்னதென்றும் தேர்ந்துகொண்டும், தான் பொறுப்பதும் தளர்வதும் களிப்பதும் கவல்வதும் எவ்வெவற்றின்பால் நேர்கின்றன என்பதை உணர்ந்தும் தன்னைத்தானாராயுமாற்றால், பொதுவாகத் தன் தன்மை இன்னதென்றும் தான் இருப்பது எதற்காக வென்பதையும் நுனித்தறியலாகின்றது. இவ்வகையில், ஒருவன், தான் எத்தன்மையனாயிருக்கின்றான் என்பது தெரிந்துகொள்வது மல்லாமல், இன்னுந்தான் எத்தன்மையனாகக்கூடும் என்பதை யோசித்துக்கொள்ளக் கூடியவனுமாகின்றான். இந்தச் சக்தியால்நாம் நமதுள்ளத்தில் பற்றியுளவித்தின் தன்மையை விளங்கக்கண்டு அது எல்லையின்றி வளர்ந்தோங்க வல்லதெனும் உண்மையை ஓர்கின்றோம். நாம் பெற்றுள நலங்களைக்கொண்டு பூரணச்செம்மையை அடையவேண்டுமெனும்நோக்கத்தில் நிலைத்தவராகின்றோம். முன்குறித்த சுயஆராய்ச்சியும் அதனால் எய்தும் இந்நிலைத்தநோக்கமும் இல்லையெனில் சுயகல்சர் என்பதும் இல்லை. இதனையே மெய்யறிவுடைய பெரியோர் ஆன்மவிசாரணை என்பர். இது இன்றி நாம் செய்வதற்குள கருமங்கள் இன்னவையென்று தெரிவது எங்ஙனம்! தன்னுளே தான் நுழைந்து தன்னையே ஆய்ந்தறிய வேண்டுமெனும் நினைவுடையாரை இந்நாளுலகத்தில் சந்திப்பது அருமையாயிருக்கின்றது. ஆதலாற்றான், வேறு எத்தனை எத்தனையோ பேசினோரும் பேசுவோரும் உளராயினும் நம்முடைய நன்மைக்கு சுயகல்சர் அவசியமென்று சொல்வாரைக்காணற்கியலவில்லை. மாந்தரிற் பெரும்பாலோர்க்குத் தம் வெளிவாழ்க்கையோடு உள்ளத்தின்செய்தியை ஒப்புநோக்குங்கால் இப்பின்னது, தங்களுக்கே மெய்ம்மையற்றவோர் அந்தகாரப் பெருவெளியாய்த் தோற்றுகின்றது. ஆசாபாசங்களால் ஒவ்வோர் சமயம் தமது மனம் அலைப்புண்டதை நினைக்கலாயினும் ஆகலாமேயன்றித் தங்கள் மனத்திற்கு ஓர் திப்பிய சக்தியுண்டென்று அவர் சிந்தித்ததுமில்லை. இவ்வகையில், மக்களில் எண்ணிறந்தோர் தங்களுக்குத்தாமே அன்னியர்களாய்க் கடவநாள் கழிக்க நேர்கின்றனர். மனத்திற்கோர் ஒப்புயர்வற்ற சக்தியுளதென்று சிற்சிலர் செவியில் பட்டிருக்கலாம். ஆனால், கையின் சக்தியும் வாயின் சக்தியும் வற்புறுத்தப்பெற்று, அக்கைக்குக் கூலியும் வாய்க்குச் சோறும் வாங்கித்தரும் முன்னேற்ற முறைப்பாடுகளிடையே காதிற்பட்டது கருத்தளவு எட்டுதற்கு இடமில்லாமற் போகின்றது. உபயோகப்படுத்தினும் படுத்திக்கொள்ளாவிடினும், தன்னையே ஆராய்ந்துகொள்கின்ற சக்தியொன்று மனத்திற்கிருப்பது நிச்சயம். ஆகையாற்றான் வேண்டுமெனின் யாவருக்கும் சுயகல்சர் சாத்தியமாகும் என்று கூறினோம்.

இதுவுமன்றி, நமக்கு இதனினும் மேன்மையான சக்தியொன்றுளது. அது, நம்மையே நாம் நியதிக்குட்படுத்தி நடத்திக்கொள்ளுமாற்றால் நமக்கோர் நிலையாய உருவத்தைத் தந்துகொளல். இந்தச் சக்தியைச் செம்மையாக உபயோகித்தால் அதன் மகத்துவத்திற்களவில்லை; அதனையே நெறிபிறழ்ந்து கையாண்டால் அதனினும் பயங்கரமானதுமில்லை. ஏனெனில், இச்சக்தியிருப்பதாற்றான் நம்முடையகருமங்களுக்கு நாம் அதிகாரிகளாகின்றோம். மானுடப் பொறப்பிற்கெல்லாம் இதுவே நிலைக்களம். நம்முடைய சக்தி இன்னதென்று ஓர்வதுமல்லாமல் அச்சக்தியைத் தூண்டி நடத்தவுங் கூடியவர்களாயிருக்கின்றோம். நம்முடைய உடைமைகளைக் காப்பதுமல்லாமல் ஆளவும் வல்லோம். நம்முடைய சக்தி வளர்வதைக் கண்டிருப்பதுமன்றி அவ்வளர்ச்சிக்கு உதவியாயவைகளைச் செய்யவும் இயலும். வெள்ளம்போல் பெருகும் நமது எண்ணங்களை நாம் அணைகோலி மடைமாற்றித் தடுக்கவும் திருப்பவும் கூடும். உணரவேண்டிய விடயங்களில் நமது புத்தியைச் செலுத்தி நிறுத்தலாம். பூரணச் செம்மையில் நாட்டத்தை நிலைக்கவைத்து எல்லாம்அதன்பால் விரைந்தடையும்படி செய்யவும் இயன்றவராயிருக்கின்றோம். இதுவே நமது இயற்கைக்குரிய மேன்மை. இம்மேலாய உரிமை நமக்கிருப்பது நிச்சயம். எனின் நம்முடையநிலைமை யாவதாயின் என்! இக்காலம் புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கின்ற விடயங்கள் எத்தனையோ, ஆயினும், தொன்மையான இவ்வுரிமை நமக்கிருக்கின்றதென்பதையும் அவ்வுரிமைக்கு ஆதாரமாய ஆன்ம சக்தி நமக்கு இயற்கை என்பதையும், அவரவர் கண்டுபிடித்துக்கொள்வதே யாவற்றிலும் முதன்மையான அவசியமாகின்றது.

அப்பர்

5. அப்பர் கவித்திறம்.

1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

[684-வது பக்கத் தொடர்ச்சி]

விஸ்தார கவி.

கருப்பொருள்:—தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்னும் பதினான்கு வகையுடைய கருப்பொருள்கள் ஒவ்வொரு நிலத்திற்கும் உரியன.

(1) தெய்வம்:—குறிஞ்சியின் தெய்வம் முருகக் கடவுள், நெய்தல்நிலத் தெய்வம் வருணன், மருத நிலத் தெய்வம் இந்திரன், முல்லையின் தெய்வம் கண்ணன். பாலைக்குத் தெய்வமில்லை. இவற்றுள் குறிஞ்சியின் தெய்வமாகக் கொண்டாடப்படும் முருகவேள் பரமசிவனேயன்றி வேறு கடவுளல்லரென்பது அப்பர் கொள்கையாம்*. கிழக்கு, மேற்கு என்னும் திக்குகளின் காவலர்களான இந்திரனும் வருணனும் வழிபடும் கடவுளான சிவபெருமானே திசைகளினிறைவனவார் திருமாலையே முதற்சந்தியாய்த் தன்னிடங்கொண்டு திரிபுரசங்கார காலத்தில் அம்பாக்கிய அவ் வில்லாளியே எல்லா நிலங்களுக்கும் பொதுவான தெய்வமாகும்:—

எட்டாந்திசைக்கு மிருதிசைக்கும் மிறைவா முறைபெ
றிட்டாரமரர் வெம்பூசலெனக் கேட்டெரி விழியா [ன்
வொட்டாக் கயவர் திரிபுர மூன்றையு மோரம்பினு
லட்டானடிநிழற் கீழதன்றோ வென்ற ஞருயிரே
ஆருயிர்த்திருவிருத்தம் 1.

(2) உயர்ந்தோர் - தாழ்ந்தோர்:—சிவனடியார்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதமில்லை:—

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில் புகழீசன்றன் னருள்பெற்றேற்கு முண்டுகொல்
திண்ணிய மாமதி லாரூர் திருமூலத்தானெங்கள் [லோ?
புண்ணியன் தன்னடித் தோண்டர்க்குத் தொண்டராம்
[புண்ணியமே
திருவாரூர் - திருவிருத்தம் 7.

என்பதனால் தொண்டர்களில் உயர்வு தாழ்ச்சி யென்பன சற்றும் கிடையா. திருநெறி மறந்த ஞான்றே தாழ்வுநேரும் - அதனால் தண்டனையும் வரும்:—

ஓதுவித்தாய் முன்னறவுரை காட்டி யமணரோடே
காதுவித்தாய் கட்டநோய் பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கிற் புளியம்வளரால்
மோதுவிப்பா யுகப்பாய் முனிவாய் கச்சியேகம்பனே
திருவேகம்பம்—திருவிருத்தம் 1.

ஆயினும் அடியார்களுக்கு யாதொரு குறைவுமில்லை. உற்றாரிலாதார்க்குறுதுணையாவன வோதிநன்னூல்
கற்றார்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
கிற்றார்தமக்குக்கிளரொளிவானகம் தான்கொடுக்கும்
மற்றார்க்கரும்பொருள் காண்கவையாற னடித்தலமே
திருவையாறு- திருவிருத்தம் 3.

* முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமக
னென்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளனே.
திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை 7.

சீலத்தராய்ப் புன்மைதவிர்த்து வலியா நிலைநிற்கும் ஐயாற னடித்தலம்பற்றினவர் யாவரும் ஞானச்சுடராய் விளங்குபவராம். அடக்கம், தாழுரை, நிராசை முதலியனவற்றைக் கைப்பற்றி ஒழுகும் சிவனடியார்கள் தாழ்ந்தோரெனின், அந்நிலத்தில் உயர்ந்தோரெனக் கொள்ளப்படுவர் பரம்பொருளன்றி மற்றுயாவருமிலர் - அப்பொருளே

ஓதிய ஞானமு ஞானப்பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியுமாவன விண்ணு மண்ணுஞ்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மானவையாற னடித்தலமே
திருவையாறு—திருவிருத்தம் 7.

இப்மேலோன் அண்டசராசர நிலையில் நோக்குமிடத்து,

அரியய னிந்திரன் சந்திராதித்த ரமரரெல்லாம் [தார்
உரிய நின்கொற்றக் கடைத்தலையாருணங்காக் கிடந்
புரிதரு புன்சடைப்போகா முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடையேகம்பவென்னோ திருக்குறிப்பே
திருவேகம்பம்—திருவிருத்தம் 7.

(3) பறவை:—இயற்கைத் தோற்றங்களைப் பாடுவதில் அப்பரினும் சிறந்த கவியில்லை. "மாசிலொள்வாள்போய் மறியு மணிநீர்த் தொகுதியில்" ஒண்காற் சிறகன்னம் ஊசலாடுவது முன்னரே கண்டோம். பெரும்பாலும் சிவஸ்தலங்கள் நெய்தல் பெற்றிருப்பதால், அதுவும் காண்க:—

நெய்தற்குருகு தன்பிள்ளையென்றெண்ணி நெருங்கிச்
[சென்று
கைதைமடல் புல்குதென் கழிப்பாலை யதனுறைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன் வைத்த பரிசறியோம்
எய்தப்பெறி லிரங்காது கண்டாய் நம் மிறையவனே
திருக்கழிப்பாலை - திருவிருத்தம் 1.

(4) விலங்கு:—முல்லை நிலத்திற்குரியதைக் கையிலேற்றும் குறிஞ்சியில் பருத்த மிருகத்தை உரித்துப் போர்த்தும் "ஓடிய பன்றியை யெய்தும்" "குற்றமில் வேதமுடையானை" அப்பர் திருவிருத்தங்களிற் பாடுகின்றார்:—

வானமதியமும் வாளர வும்புன லோடுசடைத்
தானமதுவென வைத்துழல் வான்றழல் போலுருவன்
கானமறி யொன்று கையுடையான் கண்டியூரிருந்த
ஊனமில்வேத முடையானை நாமடியுள்குதுமே
திருக்கண்டியூர் - திருவிருத்தம் 2.
[கொம்பொன்
செற்றுக்களிற்றுரி கொள்கின்ற ஞான்று செருவெண்
றிற்றுக்கிடந்தது போலு மிளம்பிறைப் பாம்பதனைச்
சுற்றிக்கிடந்தது கிம்புரிபோலச் சுடரிமைக்கு
நெற்றிக்கண் மற்றதன் முத்தொக்கு மாலொற்றி யூர
[னுக்கே
திருவொற்றியூர் - திருவிருத்தம் 1.

பொன்மலையில் வெள்ளிக் குன்றதுபோலப் பொலிந்திலங்குந் தில்லையம் பலவன் உருவத்தில் ஐந்திணையும்

விளங்குவதாய் அந்நில விலங்குகளும் சிவபராக்கிரமம் விளக்காநிற்கும்.

(5) ஊர்:—இப்பெருமான் ஊர் யாது என்னும் வினாவுக்கு விடை:—

படையார் மழுவொன்று பற்றியகையன் பதிவினவில்
கடையார் கொடிநெடுமாடங்க ளோங்கு கழுமலமா [ள்
மடைவாய்க்குருகினம் பாளைவிரிதொறும்வண்டினங்க
பெடைவாய் மதுவுண்டுபோதிருக்கும் பெரும்பதியே

திருக்கழுமலம்—திருவிருத்தம் 1.

(6) நீர்:—கங்கை நீரே காவிரியாய்த் தமிழ் நாட்டில் ஐந்திணை எல்லையிலும் செல்லும். அந்நீரில் குளித்தவர் பக்தராவாரென்பது அப்பர் துணிவு:—

களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன்னின்ற விப்பத்தரைக்கோதில்செ
றெளித்துச் சுவையமு தூட்டியமரர்கள் சூழிருப்ப [ந்தேன்
வளைத்துப்பெருஞ் செல்வமாக்கு மையாறனடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 7.

(7) பூ:—எந்நிலப்பூவும் சிவபெருமானுக்கு உவந்ததேயாம்: நெய்தற் பூ, மருதநிலத்திற்குரிய தாமரை, பாலைக்குரிய குரா, குறிஞ்சிக்குரிய வன்னி, முல்லைக்குரிய கொன்றை,யாவும் உமையவள்பாகனுக் கருச்சிக்கப் படும்.

திருவமர் தாமரை சீர்வளர் செங்கழுநீர் கொணெய்தல்
குருவமர் கோங்கங் குராமகிற்செண்பகங் கொன்றைவன்னி
மருவமர் நீள்கொடி மாடமலி மறையோர்க ணல்லூர்
உருவமர் பாகத்துமையவள் பாகனை யுள்குதுமே

திருநல்லூர் - திருவிருத்தம் 10.

(8) மரம்:—எத்திணையாயினும் தனிமரமாயின் அந்த மின்றாம். அடியார் குழாம் திருவின் பொலிவு காட்டுவதுபோல, பொழில் சோலை யென்பனவே அப்பருக்கு மனம் கவரும் தன்மையனவாம். "வேம்பினைப் பேசி விடக்கினை யோம்பி வினைபெருக்கா"ச் சிலர்கள் வாழுந் தில்லையில், கமுகின் தோற்றம் காண்க:—

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல் வந்தெறிவாழ்வயற் றில்லை தன்னு
ளாளவுடைக் கழற் சிற்றம் பலத்தா னாடல்கண்டாற்
பீளையுடைக் கண்களாற் பின்னைப் போய்த் தொண்டர்
[காண்பதென்னே!

கோயில்திருவிருத்தம், பண் - கொல்லி.

(9) உணவு:—எந்நிலமாயினும், எத்தன்மையான உணவு ஏற்பினும், புலையாடு புன்மை நீக்கவேண்டுமென்று, சிவநேசருணவை அப்பர் எதிர்மறையில் விளக்குகின்றார்:—

மலையான் மடந்தை மனத்தன வானோர் மகுடமன்னி
நிலையா யிருப்பதை நின்றோர் மதிப்பன நீணிலத்தும்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுலகம்மளிக்கும்
அலையார் புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 7.

(10) பறை:—பறை என்பது உலக வழக்கில் தப்பட்டை, தமுக்கு, முதலிய பேயர்கள் வாய்ந்த தோற்கருவியாம். இது வெகு தூரத்திலிருப்பவர்கள் கேட்பதற்கும், விளிப்பதற்கும், வெறியாட்டிற்குத் துணைக்கருவியாயும் தமிழ்நாட்டிற் பயன்பட்டதாம். ஒவ்வொரு நிலத்திற்கும் அதற்குத் தக்க பறையுண்டு. பிணைப்பறை நெய்தற்பறை யென்பர்; மணப்பறை மருதப்பறையாம். சிவபெருமான் தசாங்கத்தில் பறை யொன்றாதலால், அந் நாதப்பறையின் இலக்கணம் இச்செய்யுளா லனுமானிக்கலாம்:—

அட்டுமொலி நீரணிமதியும் மலரான வெல்லாம்
இட்டும் பொதியுஞ் சடைமுடை யானிண்டை மாலை
[யங்கைக்
கட்டு மரவது தானுடையான்கண்டி யூரிருந்த
கோட்டும் பறையுடைக் கூத்தனையாமண்டர்கூறுவதே

— திருக்கண்டியூர் - திருவிருத்தம் 8.

(11) யாழ்:—இனிமையிற் சிறந்த நம்முன்னோர் பயின்ற இசைக்கருவிகள் குழலும் யாழுமென்பர். இவற்றின் ஏற்றம்

"குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொற்கேளா தவர்" என்றார் திருவள்ளுவர்.

பிணக்காட் டாடும்பெருமான் பேய்களுடன் நடனம் செய்யுங்காலை, குழலை யொரு இசைக்கருவியாய்ப் பயன்படுத்துகின்றார் என்பது பிரமாணம்:—

விடுபட்டி யேறுகந் தேறியென் விண்ணப்ப மேவிலங்கு
கொடுகொட்டி கொக்கரை தக்கை குழல் தாளம் வீணை
[மொந்தை
வடுவிட்ட கொன்றையும் வன்னியு மத்தமும் வாளரவும்
தடுகுட்டமாடுஞ் சரக்கறையே யென்றணிநெஞ்சமே

சரக்கறைத் - திருவிருத்தம் 8.

அவ்வாறே வீணையும் எம்பெருமான் இசைக்கருவியாகும். வீணை யென்பது ஒருவித யாழ். முற்காலத்தில் எழுகு பித்தளைக் கம்பிகளால் இசைநரம்புகள் செய்வதில்லை. மாட்டின் தேகத்திலுள்ள நரம்புகளைச் சுத்தம் செய்து வீணைக்கும் யாழ்க்கும் நந்தனார் தந்ததாகப் பெரியபுராணம் கூறும். "எழு நரம்பினோசையாளை" என்றார் அப்பர். இவ்வோசையால் ஸ்தூலக் கருவிகளா லாக்கக்கூடாத பல காரியங்கள் (இசைச் சக்தியால்) முன்னோர் செய்தது உண்மையெனின், பிரளயகாலத்தில் அழிந்த அண்டசராசரங்களை மீள்விக்க இக்கருவியை எம்பெருமான் கொண்டாரென்பது வியப்போ?

பெருங்கடல் மூடிப்பிரளயங் கொண்டு பிரமனும்போ
யிருங்கடன் மூடியிறக்கு மிறந்தான் களேபரமுங்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்கொண்டு கங்காள
ராய்
வருங்கடல் மீளநின்றெம்மிறை நல்வீணை வாசிக்குமே

தனித்திருவிருத்தம் 7.

ஒவ்வொரு திணைக்கும் * தனித்தனி யாழ் உண்டு. அவற்றின் பேதங்களும் சிறப்பிலக்கணங்களும் அறிஞர் ஆராய்க.

* பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடு
மாலை யாரழ லந்தண ராகுதி
வேலை யார்தொழும் வீழி மிழலையே.

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை 10.

குலசேகரர்

[638வது பக்கத் தொடர்ச்சி]

பிறவிவேண்டுந் துறவி

பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்
பொன்வட்டில்பிடித்துடனே புகப்பெறுவே னாவேனே

[பின்னிட்ட - திரித்துவிட்ட, அல்லது பின்னே தொங்கவிட்ட, அல்லது பின்னிட்டு வரும்; துன்னிட்டு - நெருங்கி; ஆழி - சக்ராயுதம்; வட்டில் - எச்சிற்படிக்கம்]

வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந்தாரும் வேண்டுதல் வேண்டாமை யிலாதவரே யாவர். ஆதலினால், "மீளப்பிறத்தல் வேண்டும்; மக்களாய்ப் பிறத்தல் வேண்டாம்" என வேண்டியும் வேண்டாதும் நிற்றல் இன்றபணி நிற்றல் அன்றாம். இறைவனோடியைபு ஏற்பட்டபோது, "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதாமோ" என அஞ்சவேண்டுவதில்லை. மக்கட்பிறவியை மறுக்க வேண்டுவதில்லை அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும். அத் தொண்டர்நிலை பெறுவதனால் மக்கட் பிறவியும் வேண்டற்பாலதாம். மீனே சுனைநீர் வற்றினால், இறைவன்தொடர்பை இழக்க வேண்டிவரும். அவ்விழவு இல்லாத மக்கட்பிறவி அவ்வகையில் பெருமையுடையதே யாகும்.

வைகுந்தம்

மக்கட்பிறவி எடுத்தும் மாலுலகடையலாம். பொந்தியொடு பொன்னுலகம் போகும் வழி யிதே யாகும். மாலுலகம் என்பது கருவானத்தின் மேலே இவ்வுலகம் போன்றுள்ளதோர் உலகம் என எண்ணற்க. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நீடுவாழும் மிசைநிலமோ, உண்மையறி வின்பமாய் உள்ளும்புறமும் ஒளிரும் இராப்பக லற்ற நடுநிலை யுலகமாகும். இயற்கையினழகும் அடியவர் அன்பும் எங்கே மிகுதியாகக் காணப்படுகின்றதோ அதுவே அகமும் புறமும் அனைத்துமாய மாலுலக மாகும். இயற்கையின் ஏரெழிலுக்கும் அன்பர் குழாத்தின் இன்பஅன்புக்கும் இருப்பிடமாதலினால் அன்றோ, திருவேங்கடம் திருமலை என்று சிறப்பிக்கப்படுகின்றது.

நீள் வாசல்

அனைத்துமாய அம் மாலுலகத்தின் வாயில் நீண்டதொன்றே யாகும். அவனே அனைத்து மாயபோது தொட்டதொட்ட இடந்தோறும் தோன்றுகின்றானாதலின் நின்றஇடத்தே நெடுமாலைக் காணலாம். எனவே, எப்பொருளும் அம்மாலுலகின் வாயிலாயபோது அவனைப்போல அதுவும் பரந்தொன்றுகின்றது; நீண்டதொன்றுகின்றது. பெயரும் வடிவுமான உலகமெனும் திரைக்குள்ளே, ஒளிர்கின்ற உண்மையாம் தகழியில் ஊற்றிய இன்பமாம் நெய்யோடு எரியும் அறிவெனும் சுடர்விளக்கைக் காணாது இருட்டில் தடுமாறுகின்றோம். உலகமாய்ப்பரந்த நீள்வாயில் அப்பொழுது, நெருப்பாறும் மயிர்ப் பாலமுமாய் நெருக்கடியாகின்றது. வானம்போல் வளர்ந்தகன்ற அவ்வாயில் எல்லோர்க்கும் புலனாவதில்லை.

துன்னிட்டுப் புகலரிய

அன்புவடிவான அணுக்கத்தொண்டருக்கே அது புலனாகும். மற்றையோர்க்கோ எல்லோரும்வந்து நெருக்குஞ் சிறுவழியாகத் தோன்றுகின்றது. இடமகன்று நின்றபோதும் அதனையறியாது ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து தாக்கியும் தாக்குண்டும் இடர்ப்படுகின்றனர். நெருக்கமென நினைத்தவரங்குப் புகலாவதில்லை. தாம் எண்ணியதே வழி என மன்றாடும் குறுகிய நோக்கமுடையாருக்கு அதுதான் குறுகிய வழியாகின்றது. பிறரைப் பின்தள்ளி முற்புகவிரும்புவார்க்கு மாலுலகில்புக வழியுண்டோ? உலகமனைத்தும் உலகளந்தானின் உடலமாதலின் உலகப்பொருளனைத்தும் அவனெதிரே காணப்படும். அனைவரும் சூழப் பெருஞ்சிறப்போடு வீற்றிருப்பான் ஆண்டவன். இவ்வன்பின் பெருக்கத்தை யறியாது துன்ப நெருக்கடி என மருண்டு மயங்கி வருந்துவாரை என் என்பது.

பின்னிட்ட சடையானும்

அங்கே அன்பு ஒன்றற்கே சிறப்புண்டு. கல்வியறிவிற்கும் செல்வச்சீருக்கும் நோன்பின் வன்மைக்கும் அங்குச் சிறப்பில்லை. பின்னே நீண்டு தூங்கும் சிக்குத் தலையுடையார் உள்ளே புகவறியாது தயங்கிப் பின்னே அவ்வாயிலில் நிற்கின்றார். சிக்குத்தலை (சடை)யும் பிறவும் அந்நோன்பு நோற்பாரின் நிலையையன்றோ குறிக்கின்றன. அன்புநிலையில் அவனையடைய ஒருப்படாது உடலைவாட்டும் நோன்புநிலையில் அவனை நம் நோன்பிற் கடிமையாக்க முயன்றால் பின்னே தயங்கவேண்டித்தான் வரும்.

பிரமனும்

பெரியோனாகிய மறைக்கிழவனும் புகமாட்டாது பின் தங்குகின்றான். முதற்கிழவனது முதுமைக்கேற்ற, மூதறிவும் மறைக்கிழவனும் மறையோதியதற்கேற்ற நூலறிவும் உலகறிவேயன்றி உண்மையறிவாம் மெய்யுணர்வன்று. நோன்பு நோற்பதெல்லாம் மெய்யுணர்வுபெறவே யாதலின் உண்மையறிவிலாதபோது ஒருபயனும் இல்லையாம். உலகையும் கடந்து உள்ளீடாய் நின்ற இன்ப ஒளியை உலகறிவுகொண்டே காணமுயலுதல், முடவன் கொம்புத்தேனுக்கு அவாவிய கதையாக முடியும். கற்றதனாலாய பயன் என் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின். ஆனால் கல்வியறிவையும் கடந்தது கடவுளின் கழலிணை ஆதலின் வெறுங் கல்வியறிவுடையாரும் வெளியே நிற்கின்றனர்.

இந்திரனும்

இந்திரன் என்பது செல்வவானை யன்றோ குறிக்கின்றது. சாவாமருந்துண்டு இமையாது நின்று ஏரெழில் கண்டு செல்வத்தில் திளைப்பாராய் ஐம்புல இன்பமும் ஆரத்துய்ப்பவர் அந்நிலையளவில் நின்றுவிட்டால் இறைவன் நிலையை அறிதல் இயலாது. இமையவர், இன்பம் நுகர்ந்தாலும் அதன் உண்மையை உணர்ந்திலர். என்பினைக் கடிக்கும் நாய், தன்வாய்க்குள் என்பு தைத்தலால் செங்குருதி கசியக்கசிய

அதனை என்பிலூறும் இனிய சாறெனச் சுவைத்துக் களித்தல்போலச் செல்வத்தில் திளைப்போரும் தம்முளூறும்தனியின்பத்தையே யறியாதுதம்மையேயுண்டு சாகின்றனர். ஐயுணர் வெய்தியவிடத்தும் பயமின்றே மெய்யுணர் வில்லாதவர்க்கு. ஆதலின் மெய்யுணர்வு பெற்று அன்புவடிவாய் அனைவர்க்கும் அடிமையாம் உரிமை பூண்டாலன்றி அவனை அடைய இயலாது. அவனுலகில் வெளியேதான் நிற்றல்வேண்டும்.

வேங்கடக்கோன்

நோன்பாலும் கல்வியாலும் செல்வத்தாலும் ஆண்டவனை அடைதல் இயலாதென இயம்பவும் வேண்டுமோ? மின்னெனத் தோன்றி மறையும் இவ்வுலகத்தினை அதன் அடிப்படையாய்த் தாங்கிநிற்பது அழியாத அறமேயாகும். அஃது அறிவு ஒளியாயினும் அழியாததொன்றும். மின்னலையே ஒரு வட்டமாகச் செய்தமைத்தது போன்று சுடர்விட் டெரிகின்றது. இவ்வறத்தையே தனது பெரும்படையாக வலக்கை ஏந்திய அறவாழி யந்தணன், நோன்பு நோற்றுரும் கல்விகற்றுரும் செல்வம்பெற்றுரும் காணலாகாத கடைநிலையாக நிற்றலின், அவர்கட்கெல்லாம் தனிப் பெருங் கோனாக விளங்குகின்றான். உலகும் உயிருமாய இயற்கையின் ஏரெழிலே ஒரு மலைவடிவம் கொண்டது போன்றது வேங்கடமலை. அதற்கொரு கோனான இவ்வாண்டவன், எதற்கும் எவர்க்கும்இறைவனே யாவன்.

உமிழும் பொன்வட்டில்

அவனை எவ்வாறு அடைதல் கூடும்? அவனைப்பிரிய மாட்டாத அழுத்தமான அன்போடு, யான் எனது, என்னும் செருக்கறுத்து அடியார்க்கு எளியனுப் அடக்கமும் அமைதியும் பெற்றுத் தன்னிழலில் தனி நின்று இறைபணிநிற்கும் தொண்டர்நிலைதான் தூய நிலையாகும். தொண்டர் உள்ளே புகவந்தால் உலகம் முழுதும் ஒதுங்கி நிற்குமாதலின் அவர்கள் எளிதே உட்புகுவர். தொண்டராயினுர், உயர்ந்த பணிவிடையே செய்ய முற்படுவதில்லை. முடிசூட்டும் தொண்டையே வேண்டி நில்லாது, எச்சிலேற்கும் வட்டிலைப் பிடித்திருக்கும் இறைபணியே வேண்டுவர். மறையோனப்பணி செய்தலும் ஒன்றே, பறையனுய் நின்று பணிசெய்தலும் ஒன்றே. மறையவர் என்றும் பறையர் என்றும் இறைவனெதிரே வேறுபிரிப்பார் அறிவிலிகளே ஆவர். எல்லாம் இறைவனுயபோது எச்சிலும் இறைவனுதல்வேண்டும். இகழப்படும் எருவும் மருக்கொழுந்திற்கு மணமூட்டிநிற்பதொன்றே; எருவிலும் இறைவன் உண்மை யின்ப அறிவாய் இருந்து ஒளிர்வதனைக் காட்டவில்லையா? அன்புநிலை நின்றுரே எச்சிலும் இன்பவடிவினதென்பதை உணர்வர்

பாமொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

என்று காதலன் பாடியது அன்புநிலையில் நின்றதால் அன்றே? உண்மையறிவுஇன்ப வடிவினனுய இறைவன் உமிழ்வதற்கு அறிவன்றியாதுளது. அவன் உமிழ்வது பொன்னேயாகும். அப்பொன்னே இன்பவடிவாய்ப் பொலியும் அறிவேயாகும். இறைவன் உமிழும் அறிவாம் பொன்னை அருகுநின்று ஏந்த மின்வட்டம் போன்றதொரு மணிவட்டிலாகிய மனமொன்றினை உறுதியாகப் பிடித்து உடன் செல்லவேண்டாமா? பிடித்துடனே புகப்பெறுவே ஞவேனே

வட்டில் பிடிப்பாரையன்றே இறைவனுடனேயே உள் விடுவர்.

கண்கண்ட தெய்வம்

ஆன்ற அறிவும் சொன்னயமும் செறிந்தன வாய்த் தொன்றுதொட்டுள்ள இயல் இசை நாடக நூல்களனைத்துள்ளும் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் மெய்யுணர்ச்சி புலப்படுத்தப்பட்டுள்ளது. விண்ணவன் சேவடி சார்தலே பேரின்பமாகவும் பெரும்பேருகவும் கர்ணபரம்பரையாகக் கொண்டுள்ள நம் நாட்டினருக்கு, அத்தகைய மெய்யுணர் வெல்லாவற்றிலும் திருவருளின் ஆற்றலைப்பற்றி அறையும், யாதாமொரு கதைக்கூற்றே வியாசமோ, இனையனவற்றை உண்ணுகர்ந்து கருதுங்காலை, செயலும் கருமமும் மறந்து நூனுட்பத்தி லீடுபட்டு மெய்ப்பாடுற்றுக் கட்டுக்கடங்காப் பேருணர்வு எய்துதலே மிக்க சிறப்பினதாகும் ஆதலின் ஒன்று கூறுவாம்.

ஈண்டுக் குறிக்கும் விருத்தாந்தம் கதையன்று; நம்பக்கூடாதபடி வெகுகாலத்துக்கு முன்னர் நிகழ்ந்ததாகக் கூறுவதுமின்று; தொன்மையுமன்று; ஐந்தைந்து ஆண்டுகளுக்குமுன்பே நேர்ந்த சிறியதோர் சம்பவம்; ஆனால் பெரிதும் மயிர்சிலிர்ப்பித்து மெய்ப்பா டுறச்செய்வது.

நம் பாரதநாட்டின் தென்கோடியில் நீர்வள நிலவளமுடன் மற்றைப் பல்வளங்களுங் கெழுமிய திருநெல்வேலி நிலவரையைச்சார்ந்த திருப்புடைமருதூர் என்னும் சிற்றூர் ஓர்மகிமைபெற்ற சிவஸ்தலம். அருந்தொண்டர்களாற் பாடப்பெற்ற மேன்மையுடைத்து. உலகு திறம்பாது நடுவுநிலையெய்தி நிற்கும்படி முன்னாள் கைலையைவிடுத்துத் தெற்கு நோக்கிச் சங்கரனாணையிற் சென்று பொதிகைமலையைச் சார்ந்து ஆங்குத் தூயதோர் தலமொன்றில் அமர்ந்து, தமிழெனும் பாடையை மக்களுக்கு ஈந்து, பிறழாத நன்னெறியையும் வகுத்து, இன்றும் ஆண்டே தவம் இயற்றி வருவாஞகப் பனுவப்படும் அப்புண்ணியன் வைகும் வெற்பிடைத்தோன்றி, பளிங்கெனஒளிவீசி மாணிக்கப்பரல்களெனக் கூறலாம்படியான தூய கற்பாறைத் தலத்திடைத் துள்ளித்துள்ளி விளையாடுமாறுபோலப் பாய்ந்தோடி, இருடிகளகத்தினையும் கனியச் செய்யும் காட்சிதந்து, தன் தூயதன்மையால் மூழ்கிடும் ஜீவர்களின் அகத்தொடு புறத்தையும் புனிதமாக்கும் ஆற்றலுள்ளதுமாய,தாம்பரவர்ணியாறு, தன்னிலும்களங்கமற்றதித்தலமெனமேவி அடிபணிந்து சரண்புகுந்து வலம்வந்து பூசனை செய்தல்போல,இவ்வூரின் தெற்கு மேற்கு வடக்காகிய மூன்று திசைகளினும் சுற்றிக் குணதிசையில் பக்திததும்பிப் பரவசநிலையையடைந்த

அருந்தொண்டர்கள் அசைவிலாது கருணைநிதியின் சிந்தனையிலேயே அழுந்திநின்று பின்பு தேர்ந்து நகர்ந்து நம்மகம் சார்தல் போன்று, தேங்கித்ததும்பிப் பொங்கிபார்த்துப் பின்னர் அத்திசையின்பாலே கடலினைக்கிச் செல்கின்றமை, இன்றும் இயற்கை வனப்பைக்கண்டு களிகூர்வோர் கட்புலனுக்கு அருவிருந்தாகின்றது.

இத்தலம், மணமுறப் படர்ந்த காவும் அடர்ந்த பொழிலும் செறிந்த நந்தவனங்களும் மறத்தை வெருட்டும் அறம்போலத் தண்ணியதாய் அறவழி வந்தோர்க்குப் பகலவன் வெப்பத்தைத்தடுத்து யாண்டும் எவ்விடையும் தூயவிரையை ஊட்டி நிலவுகின்றது. கணித வல்லார்தம் தேர்ச்சிமுழுமையும் காட்டி வகுத்திட்டார் போன்று கோணுத கவினுற வாய்ந்த வீதிகள் பாங்காக வுடையது. தண்புனல் சூடி, வாடாத அன்றலர் பன்மலர் விரையை இடைவிடாது நுகர்ந்து, அண்டிய மக்களின் உள்ளன்பை விரித்துப் பேராதரவு அளிப்பவராய் அத் தலமிடைத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பிரானுக்கு, நாறும்பூநாதர் என்னும் திருநாமமே காரண இடுகுறியாய் வழங்கி வருகின்றது.

இப் புண்ணியதலத்தின் குடதிசையின்கண் ஆறு நிலவா நிற்கின்றதென மேலே கூறினேம். இவ்வாற்றினுக்குச் சற்றேறக்குறைய அரைக்காதவழிக்கப்பால் வழுதூர் என்று பெரும்பாலாக நுவலப்படும் திருவழுந்தூர் என்னும் பல்திறமக்களின் நாப்பண்சேரியாம் ஊர் ஒன்று உளது. அதில், இறைவனருளின் திறனையே வாழையடி வாழையாக ஓதுவது தவிர வேறோர் தொழில் இலதால் ஓதுவார் என்றபெயர்பூண்ட குலத்திடை, அணிக்கணியெனக் குலம் இலங்கவந்த கருப்பையிலேயே பேரின்பச் சுவை உணர்ந்தவாறு ஓர் உன்னத மனோநிலையை இளமைதொட்டு ஏற்று நின்ற நல்லோதுவான் என்ற ஒருபெரியார் தோன்றினர். மண் பெண் பொன் முதலியவற்றால் எனையோரைப்போன்று கட்டுடைபவரல்லராயினும், குடும்பத்தில் ஒரே மகவாய்ப் பிறந்ததால் இகசம்பந்தமான பெரியதோர் இல்லறக் கடன்களாம் கடுஞ்சுமை உந்தினும் அன்னவர் சீலம், கவினுறு பங்கய இலையில் நீர் பற்றியும் பற்றுத வாறன்ன, யாண்டும் பரமன் இணையடியே நண்ணு மனமுடையதாய், தமிழ்மறை யோதுவதிலும் திருமுறைகளின் நுட்பங்களை ஆய்ந்தறிந்து ஆனந்தங் கொள்வதிலும், யாக்கையும் செல்வமும் தாம் இன்புறுவதற்கு மட்டுமல்லாமல் வறியர்க்கும் பிணியர்க்கும், கடுங்காற்றிலகப்பட்டுச் சிதறுண்ணு மீனென வகையறியாத ஜீவர்களின் துன்பத்தை யகற்றுவதற்குமாக ஆண்டவனால் அளிக்கப்பட்டுள என்னும் உட்கருத்துடையவராய், முற்பட்ட அறவழியில் மிக்கராய் இலங்குவதிலும் மூண்டது.

சூடிக்கொடுத்த பொற்பாவையை மணந்த திருமணவாளனும் மாலுக்கு நாளும் துளபமாலை சாற்றித் தொண்டுசெய்துவந்த ஆழ்வார்போன்று, இவரும் பரந்த பூங்காவனம் நிருமித்து முறைப்படி நறுமலர் கொய்து எழில்பெறு ஆரங்களாக்கி அரைக்காததூரமும் நடந்து தினமும் அந்திவேளையில் நாறும்பூநாதருக்கு அபிஷேகமானவுடன் சூட்டுவதற்காகத் திருக்கோயில் கொண்டடைவார். பின்னர் ஆண்டு நிகழும் தீபாராதனை முதலிய பூசனைகளைத் தரிசித்து நாறும்பூநாதன் சிந்தனையாம் பேரொளியே மனத்திடை நின்று ஒளிகாட்ட ஆற்றைக்கடந்து தம்மூர் மீளுவார்.

இங்ஙனம் நிகழ்ந்துவருங்காலை ஓர்நாள் எம்பிரான், இரவி உடு மதி இவற்றின் கதிபிறழ்ந்தாலும் பிறழ்தலில்லாத தூயநெஞ்சத்தினனை நல்லோதுவானின் பக்திநிலையைப் பரிசோதிக்கத் திருவுளங்கொண்டார் போலும். யாதொருகாரணமுமின்றித் திடீரென்று வாரணங்கள் பல அதிர்த்துப் படபடவென்று குழுக்குழுவாய்ச் சென்றுற்போல மேகங்கள் கவிந்து, இடி உருமவும், அண்டங்களைப்பிளந்து அப்பால் எறிவது அன்ன வளிவீசவும், பெருமாரி பொழியலாயிற்று. இடைவிடாதுபொழியவே நல்லோன் தினமும்தேவுக்குப்புரியும் தொண்டும் தடைப்படுமாறு தோன்றியது. என்செய்வார் பாவம்! தயங்கினர்! அம்மயக்கம் சற்றலவே நின்றது. பக்திவீரம் நிறைந்த மனமென்னும் அரணி அக்கணம் மிக்க திறத்துடன் தூண்டவும் ஓதுவார்தளர்ச்சி புகையென மறைந்து, ஆரத்தைக் கையேந்தி, தெவ்வர்தம் வின்னின்று ஓயாது பொழியும் கணைகளின் ஊடே தன்னிகரில்லாத் துணிவுகொண்டு வாளைக்கையிலேந்தி அரிமாவெனப்பாய்ந்து ஒன்றலர்பால் மேவிக்கைகலக்கும் தனிவீரனேபோல, இவர் பெருமிரைச்சலோடு மாரிபொழியவும் அதைப் பொருட்படுத்தாது விரைவாக நடந்துசென்று,இறைவனுக்குச் செய்யும் தொண்டு காலந்தாழாது இயற்றப்படவேண்டும் என்னும் ஒரே அவா ஈர்த்தெழக்குடதிசையில் தாம்பரவர்ணியின் மேல்கரை வந்துசேர்ந்தார்.

அந்தோ! அவருக்கு அக்கால் நேர்ந்த பெரும் இடையூறினை யாரே வகுக்கவல்லார்! இருகரை புரண்டு, உலகத்தோர் பாவங்களையெல்லாம் பலமூட்டைகளாகக்கட்டி உருட்டிச்செல்லுமாறுபோலப் பாதபங்களையும் சிறு கற்பாறைகளையும் பதர்களையும்இன்னும் பல்வேறு பொருள்களையும் உருட்டிப் புரட்டித் திறத்தோடு ஈர்த்து, நுரைகள்பல மாசுகளின் பலவித வடிவங்களென மிதந்து செல்லப்பெற்றதாய், குதித்துக் கொந்தளித்துப் பேரிரைச்சலோடு பயங்கரமூட்டி ஓடாநிற்கும் ஆற்றின் பிரவாகத்தைக் கண்ணுற்றனர். மதிமயங்கினர், திகைகலங்கினர், கதிசோர்ந்தனர், கைசலித்தனர், திறல் குன்றினர், செயல் இழந்தனர், வாளா நின்றனர், என் செய்குவார், எங்ஙனம்அக்கரை சேருவார். அக்கரைநின்ற செக்கர் திருமேனியானுக்கு நாளும் செய்தொண்டு ஆற்றுவார், இன்று ஆற்றுவாரிலராய்த் தவித்தனர். ஆற்றுநீரோடு கட்புலன்களின் ஊற்றுநீர் கலக்கத் தேம்பி அழுதுநின்றனர். பரமனல்லாற் பிறிதோர் வழியிலை எனக் கண்டனர். 'ஆதி மூலமே' என்று கதறிய வாரணமொப்ப இருகை சிரமேற் கூப்பி, 'பொன்னே, புவியே, புலனே, புலன் தொறும் உறைசெய் கலனே, மண்ணே, மணியே, திரளே, தனியே, ஒளியே, அளியே, அறிவே, அறமே முடிவே, அடியேன் துயரதுகாணுய், கடிதினில் இன்னலைத்தீராய், திருவடி தரிசனம் தாராய்'' என்றுபக்தி பரவசனுய் நின்று தனைமறந்து கோவென்று முறை செய்தார்.

இத்துன்பக் கூற்றினைச் செவிக்கொண்ட ஆனந்த தயாபரன், அருட்பெருஞ்சோதி, பல்லுயிர்க்குயிரான் அடியார்க்கெளியன்,எத்தகைக் கொடியராயினும் தஞ்

சமென்றடைந்தாரைக் கைவிடாது காத்தல் பெரியார் தன்மையாயிருக்க, உண்மையன்பனும் களங்கமில் உளத்தனும் அன்புததும்பும் சிந்தையனும் பரமன் கழலிணையன்றி வேறோர் பற்றில்லை யென்னும் உறுதியைக் கடைப்பிடித்தவனும் ஓதும் நல்வேத வாயினனும் நல்லோதுவானுக்கு உதவி செய்யாமலிருப்பரோ!

பக்தன் ஓலமிடும் துன்பமொழிகளைச் செவி சாய்த்துக் கேட்கவும், 'செவிக்கொண்டேன் அஞ்சேல் அபயம் அளித்தேன்' என்று காட்டவும், மெய்யன்பர் உள்ளம் அனல்பட்ட மெழுகுபோல் வாடுவதைப்பொறுதான் ஈசன் என்னும் கருணை வள்ளன்மையை நிரூபிக்கவு மாக, அர்ச்சனைவடிவமா யெழுந்தருளியிருக்கும் பரமன்சிலை அக்கணமே சற்றுச்சாய்ந்தது சாய்ந்த அதேபொழுதில் ஒருங்கே திரண்டோடிய வெள்ளம் திடீரெனத் தடைப்பட்டது. தக்கணத்தும் உத்தரத்தும் பெருவெள்ளம் உயர் மதில் சுவர்போன்று வானளாவி நிற்க நடுவே ஓதுவார் அச்சமிலாது அவ்விடைவெளி நடந்தேகிக் களிப்பெனும் கடலில் மூழ்கி எழுந்தவர்போல் சற்றுநேரம் பதுமைபோல் நின்றார், புளகாங்கிதமெய்தினர், அருட்டிறத்தை வியந்தார், போற்றினர், பெறற்கரிய பேறுபெற்றாலன்னமகிழ்ந்து தோத்திரமுழக்கம் செய்தார், தன்பின்னே பிரிந்த வெள்ளம் ஒன்றியதையும் கண்டார், முன்னினும் அநந்தம் மடங்கு வியப்பெய்தினார், நாறும்பூநாதன் திருவடிமிசை நின்றார், தாயைப் பிரிந்த கன்று வெகுநேரம் கதறி எங்கும்திரிந்து காணாது இறுதியில் கண்ணுற்றால் எத்தகைய களிப்பெய்துமோ அதுவேபோல் பரமனைத் துதிசெய்து நின்றார்.

ஆங்கண், "தொண்டாஉன்பக்தியைமெச்சினேன்" என்னும் அசரீரிவாக்கும் உண்டாயது. இவ்வதிசயத்தைக் கண்ணுற்றநின்ற தொண்டர்கள் யாவரும் உமையொருபாகனின் அருள்வன்மையைப் போற்றினர். ஓதுவார் தம் தொண்டினை விடாது நடாத்தி வந்து முடிவில் பரந்தாமன் இணையடிக்கு ஆளாயினர்.

சிலகாலத்துக்குப் பின்னர் நிகழ்வுற்ற கும்பாபிஷேக உற்சவமொன்றில், அடிப்படை ஆதாரமின்மையால் சிலைநிலைகுலைந்து சாய்ந்ததெனக்கொண்டு அதைக் கோணல் நீக்கி நேராக்க முயன்ற மந்திரதந்திர முயற்சிகள் பலவும் வீணாயின. இன்னும் அன்றுகோடிய சிலை அவ்வாறே நிற்கின்றது. மெய்யன்பர்களின் கருத்தையுணர்ந்து வரமளித்துக் காப்பவராய், என்றும் பரம கருணாநிதியாய் விளங்கும் ஈசன் அருட்டிறத்தை யாரே அளவிட் டுரைக்கவல்லார்!

தமிழ்ப் பாடம் 88.

[அஷ்ட பிரபந்தம்.]

[694-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்து மாலை.

மாதண்ட மேவுங் காத்தா ரரங்கர் வடமிதிலைக்
கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவட்டு
[வெள்ளி
வேதண்ட மேய மழுவாளி நாணினன் வென்றிகண்டு
மூதண்ட மஞ்ச மழுவாளி கோப முதிர்ந்ததுவே. 8.

பதப்பிரிவு:—மா தண்டம் மேவும் கரத்தார் அரங்கர் வட மிதிலை கோதண்ட வேகம் பிறப்பித்த போது குவடு வெள்ளி வேதண்டம் மேய மழு ஆளி நாணினன் வென்றி கண்டு முது அண்டம் அஞ்சும் மழுவாளி கோபம் முதிர்ந்தது ஏ.

பதவுரை.

மா - பெரிய, தண்டம் - தண்டாயுதம், மேவும் - பொருந்திய, கரத்தார் - கையை உடையவராகிய, அரங்கர் - ஸ்ரீரங்கநாதர் (இராமாவதாரத்தில்), வட மிதிலை - வடக்கிலுள்ள மிதிலை நகரத்திற்குச் சென்று, கோதண்டம் - சிவனுடைய வில்லை முறித்த, வேகம் - வேகமான பேரொலியை, பிறப்பித்தபோது - உண்டாக்கிய பொழுது,

வென்றி - அந்தப் பராக்கிரமத்தை, கண்டு - பார்த்து, குவடு - சிகரத்தையுடைய, வெள்ளி வேதண்டம் - வெள்ளிமலையெனும் கைலாசத்தில், மேய - தங்கிய, மழுவாளி - பழுக்கக் காய்ச்சிய இருப்பு ஆயுதத்தையுடைய சிவபிரான், நாணினன் - வெட்கங் கொண்டனன்.

முது - பழமையாகிய, அண்டம் - இப்பூவுலகம், அஞ்சும் - பயப்படும்படியான, மழுவாளி - கோடாலிப் படையுடைய பரசுராமனது, கோபம் - கோபம், முதிர்ந்தது - மிகுந்தது.

கருத்து:—ஸ்ரீ இராமபிரான் மிதிலையில் வில்முறித்தவோசை நாற்றிசையும் பரவியபோது, கைலாசத்திலிருந்த சிவன் அதனைக் கேட்டுத் தான் கையாண்டதநுவை இவ்வளவு எளிதில் ஒருவன் முறித்துவிட்டானே என்ற நாணமும்; மன்னவர் குலமெலாம் இருபத்தொரு தலைமுறை அறுத்துப் பின் சகியமென்னும் மலையில் சென்று தவம்செய்திருந்த பரசுராமன் அவ்வொலியைக் கேட்டதும், இத்தகைய ஆற்றலுடைய க்ஷத்திரியனொருவன் இன்னும் இருக்கின்றானோ வென்ற சினமும் கொண்டனர்என்பது இந்தச் செய்யுளில் அடங்கிய விஷயம்.

விரிவுரை.—முன்செய்யுளில் கார்த்தவீர்யார்ச்சுனனைப் பரசுராமன் கொன்ற செய்தி கூறப்பட்டுளது. இச் செய்யுளில் தசரதராமன்பால் பரசுராமன் சினம் கொண்டதைக் கூறிப் பரசுராமன் தயரதராமனால் தோல்வியுற்றதையும் கவி குறிக்கின்றார். பரசுராமனும் தயரதராமனும்இருவரும் திருமாலினுடைய அவதாரங்களாயிருக்க, அவர் ஒரே காலத்தவரானதுமன்றி ஒருவரையொருவர் எதிர்த்துப் பொருதனர் என்பது ஆச்சரியமாயிருக்கலாம். அப்படியே, கண்ணனும் பலராமனும் ஒரேகாலத்து அவதாரங்கள். அதுவுமன்றிக் கார்த்தவீர்யார்ச்சுனனுமே திருமாலின் அவதாரந்தான். ஆயின் கார்த்தவீர்யார்ச்சுனனைப் பரசுராமன் கொல்வதும், பரசுராமனைத் தயரதராமன் வெல்வதும், திருமால் தன்னையே கொல்

வதும் வெல்வதும் செய்துகொள்வதுபோல் தோன்றுகின்றன.

இதற்குக்காரணம், நமதுசாஸ்திரங்களில் திருமாலினுடைய அவதாரங்களின் இலக்கணத்தை விளக்கியிருப்பதிலிருந்து அறியலாம். அவதாரங்கள், அம்சாவதாரம் என்றும் ஆவேசாவதாரம் என்றும் இருபெரும் பிரிவின. அம்சாவதாரம் என்பது திருமால் தானே நேராக வந்து உலகில் அவதரிப்பது. இதனை ஸாக்ஷாத் அவதாரம் என்றும் சொல்வர். பத்து அவதாரங்களில் பரசுராமவதாரமும் பலராமாவதாரமும் தவிர மற்ற எட்டுஅவதாரங்களும் அம்சாவதாரமென்னும் ஸாக்ஷாத்அவதாரங்கள் ஆகும். ஆவேசாவதாரம் என்பது பகவான் நேராகவந்து அவதரிக்காமல், மற்றவருடைய சரீரங்களில் தன்னுடைய சக்தியை ஆவேசம் செய்திருத்தல். இது ஸ்வரூபாவேசம் என்றும் சக்தி ஆவேசம் என்றும் இருவகைப்படும் ஸ்வரூபாவேசம் என்பது. பகவான் தன்னுடைய ரூபத்தோடு மற்றவர் சரீரத்தில்சேர்ந்திருப்பது; சக்தியாவேசம் என்பது தன்னுடைய சக்தியைமாத்திரம் மற்றவர் சரீரத்தில் சேர்த்திருப்பது ஆகும். பரசுராமனும் பலராமனும், ஸ்வரூபாவேசாவதாரங்கள்; கார்த்தவீர்யார்ச்சுனன் பாண்டவார்ச்சுனன் வியாசன் முதலானவர்கள் சக்தியாவேசாவதாரங்கள். இவ்விருவகையிலும் பகவான் மற்றவர் சரீரத்தில் ஆவேசம் செய்வது, தன்னுடைய கருமத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டாம். கருமம் முடிந்ததும் ஆவேசத்தை நீக்கிக்கொண்டு விடுவார். க்ஷத்திரியனது தொழிலாகிய காத்தல் தொழிலைப் புரியும்பொருட்டுக் கார்த்தவீர்யார்ச்சுனனிடம் திருமாலினது சக்தி ஆவேசம்செய்திருந்தது. பின் அடக்குவாரில்லாமல் செருக்கியிருந்த க்ஷத்திரியரை அழிக்கும்பொருட்டுப் பரசுராமனிடம் ஸ்வரூபாவேச மானார். அக்காரியம் முடிந்தபின் பகவான் ஸாக்ஷத் அம்சாவதரமான தயரதராமனாகவந்து பரசுராமனிடத்திலிருந்த தன் ஆவேசத்தைக் கவர்ந்து கொண்டார். இதுவே இவ்வவதாரங்களின் பொருளாம்.

ஒருதா யிருந்து வருந்த வைதேகி யுடன்சுரத்தி
லொருதாய் சொலச்சென்ற தென்னரங் காவைய
[முய்யும்வண்ண
மொருதா யுதரத்தி லோராறு திங்க ளுறைந்தபின்னை
யொருதாய் வயிற்றில்வந் துற்றதெம் மாய முரைத்
[தருளே. 9.

பதப்பிரிவு:—ஒரு தாய் இருந்து வருந்த வைதேகி உடன் சுரத்தில் ஒரு தாய் சொல சென்ற தென் அரங்கா வையம் உய்யும் வண்ணம் ஒருதாய் உதரத்தில் ஓர் அறு திங்கள் உறைந்த பின்னை ஒருதாய் வயிற்றில் வந்து உற்றது எ மாயம் உரைத்து அருள் ஏ

பதவுரை.

ஒரு தாய் - பெற்றதாயாகிய கௌசலை, இருந்து - அயோத்தியிலேயே இருந்து, வருந்த - வருந்தும்படி ஒருதாய் - மாற்றாந்தாயாகிய கைகேசி, சொல - சொன்னதற்கு உடன்பட்டு, வைதேகியுடன் - சீதாபிராட்டியுடன், சுரத்தில் - கொடிய காட்டிற்கு, சென்ற - போன, தென் - அழகிய, அரங்கா - ஸ்ரீரங்கநாதனே,

வையம் - இப்பூமியானது, உய்யும் வண்ணம் - துயர்நீங்கி வாழும்பொருட்டு, ஒரு தாய் - தேவகியாகிய உன் ஒரு தாயினது, உதரத்தில் - வயிற்றில், ஓர் அறுதிங்கள் - ஒரு ஆறுமாசகாலம், உறைந்தபின்னை - இருந்தபிறகு, ஒரு தாய் - மற்ற தாயாகிய ரோகிணியின், வயிற்றில் - வயிற்றில், வந்து - வந்து, உற்றது - கருவாகச் சேர்ந்தது, எம்மாயம் - என்னமாயம் என்று, உரைத்தருள் - நீயே சொல்லியருள்வாயாக.

கருத்து:—இது பலராம அவதாரத்தைக் குறிக்கின்றது தேவகிவயிற்றில் கருவாக ஆறுமாதம் வளர்ந்தபின் அதைவிட்டுப்போய் ரோகிணியின் கருவாகச் சேர்ந்து நீ பலராமனாகப் பிறந்த மாயத்தை எனக்குச் சொல்லியருள்வாயாக, என்பது இச்செய்யுளின் கருத்து.

உன்னைக் களவி லுரலோடு கட்டிவைத் துன்னுடைய
அன்னைக் கொருத்தி யறிவித்த போதலை யாழிமங்கை
தன்னைப் புணர்ந்தரு டாரரங் காவவ டன்மருங்கிற்
பின்னைக் கொடுசென்ற பிள்ளைமற் றாரென்று பேசு
[கவே. 10.

பதப்பிரிவு:—உன்னை களவில் உரலோடு கட்டி வைத்து உன்னுடைய அன்னைக்கு ஒருத்தி அறிவித்தபோது அலை ஆழி மங்கை புணர்ந்து அருள் தார் அரங்கா அவள் தன் மருங்கில் பின்னை கொடு சென்ற பிள்ளை மற்று ஆர் என்று பேசுக ஏ.

பதவுரை

அலை - அலைகளையுடைய, ஆழி - கடலில் தோன்றிய, மங்கை - திருமகளை, புணர்ந்து அருள் - புணர்ந்தருள்கின்ற, தார் - மாலையையணிந்த, அரங்கா - ஸ்ரீரங்கநாதனே, (கிருஷ்ணாவதாரத்தில்)

ஒருத்தி - ஒரு இடைச்சி, களவில் - நீ பால்தயிர் திருடியகாலத்தில், உன்னை - உன்னை, உரலோடு - உரலோடு, கட்டிவைத்து - கட்டிவைத்து, உன்னுடைய - உன்னுடைய, அன்னைக்கு - தாயாகிய யசோதைக்கு, அறிவித்தபோது - உன் திருட்டைப் போய்த் தெரிவித்தபோது, அவள் - அந்த இடைச்சி, தன் - தன்னுடைய, மருங்கில் இடுப்பில், கொடுசென்ற - எடுத்துக்கொண்டுசென்ற, பிள்ளை - பிள்ளைதான், மற்று - வேறு, ஆர் என்று - யாரென்று, பேசுக - சொல்வாயாக.

விரிவுரை:—மாமாயனா யவதரித்த கண்ணபிரானது இளம்பருவ விளையாட்டுகளில் ஒன்றைக் குறிக்கின்றது இப்பாசுரம். கண்ணன் புகுந்து தங்கள்மனை நெய் பால் தயிர் வெண்ணெய்களைக் களவாடுகின்றானென்று கோவியர்கள் யசோதைக் கெவ்வள வுரைத்தும் அவள் நம்பாதிருத்தலைக் கண்டு கையுங்களவுமாகக் காட்டவேண்டுமெனக் காத்திருந்த இடைச்சிகளில் ஒருத்தி, உரல்மேலேறி உறியினின்று திருடிக்கொண்டிருந்த கண்ணனைப்பிடித்து அவ்வுரலோடு கட்டிவைத்து விட்டு, யசோதையை அழைத்துவந்து காட்ட வேண்டுமென்று புறப்பட்டவள் தன்னுடைய பிள்ளையைத்தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு போய் யாவையும்சொல்லி அவளை வந்துபார்க்கும்படி வேண்ட, அப்பொழுது கிருஷ்ணன் தன்னுடைய மாயையினால் அவள் இடுப்பிலிருந்தபிள்ளை தானேயாகவும், உரலில் கட்டியிருந்தபிள்ளை அவளுடைய பிள்ளையாகவும் மாற்றிக்கொண்ட வரலாற்றை வைத்துக் கவி இவ்விதம் அழகாகப் பாடியிருக்கின்றார்.

இலக்கணம்.

நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்தும் வருமொழிமுதலில் உயிரெழுத்தும் வந்து புணர்கின்ற

இலக்கணத்தைப் பார்த்து முடித்தோம். இனி, நிலைமொழிஇறுதி வருமொழிமுதல் ஆகிய இரண்டிடத்தும் உயிரே இருக்குமானால் அவை எவ்வாறு புணரும் என்பதைப் பார்ப்போம்.

நிலைமொழியிறுதியில் உயிர் இருப்பதென்றால், அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்ற எழுத்துக்கள் அப்படியே இருக்கவேண்டும் என்று எண்ணப்படாது. நிலைமொழி ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்ற ஓரெழுத்துஒருமொழிகளாகவாவது, அ இ உ என்ற சுட்டெழுத்தாகவாவது, எ என்னும் வினாவெழுத்தாகவாவதுதான், உயிரெழுத்து உயிரெழுத்தாகவே, வருமொழிமுதலில் வருகின்ற உயிரிற்கு முன்னே நிற்கக்கூடியதாகும். மற்றபடி ஈற்றுயிர் என்று சொல்லும்போது நிலைமொழி யிறுதியிலுள்ள உயிர்மெய் எழுத்தின் இறுதியில் ஒலிக்கின்ற உயிர் ஒலியே யாகும்.

எழுத்துக்களுக்கு இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. ஒன்று ஒலிவடிவம்; அதாவது, அவ்வெழுத்து உச்சரிக்கப்படும் ஓசை. மற்றது வரிவடிவம்; அதாவது, அது எழுதப்படும் உருவம். அ, க், பா, என்ற எழுத்துக்களை நாம் உச்சரிக்கும்போது அவை தத்தமக்கு உரிய ஒலிவடிவங்களோடு தோன்றுகின்றன; அவைகளை நாம் எழுதும்போது அவ்வோசைக்கு அறிகுறியான வரிவடிவத்தைத் தருகின்றேம். அ, முதலான பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள்; அவை ஒவ்வொன்றிற்கும் இருக்கின்ற ஒலி ஒவ்வொன்றே. ஒலியுருவம் எதுவாயிருந்தாலும் இவ்வுயிரெழுத்துக்களில், அ இ உ எ ஒ, என்ற ஐந்து குறில்களின் உச்சரிக்கும் அளவு, அல்லது மாத்திரை எனப்படுவது, ஒன்று. அதாவது ஒருதரம் கைநொடித்தல் அல்லது கண்ணிமைத்தல் செய்யும் நேரத்தினளவுதான் அந்த உயிர்க்குறில் எழுத்தொன்றை உச்சரிப்பதற்கு வேண்டியிருக்கும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ, என்ற உயிர் நெடில்கள் ஒவ்வொன்றும் அவ்விதமே இரண்டு மாத்திரைபெறும். க், ங் முதலிய பதினெட்டு மெய்யெழுத்துக்களுக்கும் ஒலிவடிவத்தில் உள்ள அளவு அல்லது மாத்திரை அரை. அதாவது ஒருதரம்கைநொடிப்பதற்குள், கண்இமைப்பதற்குள் இரண்டு மெய்யெழுத்துக்களை உச்சரித்துவிடக்கூடும்.

இனி, க கா, என்று க முதல் ன ஈறாக உள்ள பதினெட்டு வரிசைகளில், வரிசைக்குப் பன்னிரண்டாக அமைகின்ற இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவின் தன்மையை நன்றாக அறிவோம். ஆனால், அவைகளின் ஒலிவடிவின் தன்மையை இப்புணரிலக்கணத்தின் பொருட்டுச் செவ்வனே உணரவேண்டும். க ஙா கி ஞீ டு ணூ தெ நே பை மொ யோ ரௌ, வென்பனபோன்ற உயிர்மெய்யெழுத்துக்களை உச்சரித்துப் பார்ப்போமானால் அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஓரே எழுத்தானாலும் மெய்யின்ஒலி உயிரின்ஒலி ஆகிய இரண்டு ஒலிகளும் கலந்துவரக் காணலாம். க்+அ,=க, அல்லது ப்+இ=பி, அல்லது, ட்+ஊ=டூ, என்று உயிர்மெய்யெழுத்துக்கள் ஆவதால், அவை முதலிலே க் ப் ட் என்ற மெய்யெழுத்துக்களின் ஒலியையும், பின் அ, இ, ஊ என்ற உயிரெழுத்துக்களின் ஒலியையும் உடையனவாகின்றன. ஒலிவடிவில் மெய்யினொலி உயிரினொலி ஆகிய இரண்டு ஒலிகளையும் பெற்றிருந்தாலும், உயிர்மெய்யெழுத்துக்களும், அ, ஆ போன்ற உயிரெழுத்துக்களையும், க் ங் போன்ற மெய்யெழுத்துக்களையும் போலவே ஒரு தனிவகை எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், உயிர்ஒலியும் மெய்யொலியும் பிரிந்து இசைத்தாலும், அளவு அல்லது மாத்திரையில் அவையிரண்டும் தனித்து நில்லாமல் ஒன்றாகிவிடுகின்றன. ச, என்னும்போது, அதற்கு ச் என்னும் மெய்யின் மாத்திரை அரை, அ, என்னும் உயிரின் மாத்திரை ஒன்று, ஆக ஒன்றரை மாத்திரை கால அளவு அந்தச் ச என்னும் உயிர்மெய்யெழுத்து உச்சரிக்கப்படுவதில்லை. அதற்குஅமைந்தமாத்திரை ஒன்றுதான். அதாவது, அ, என்னும் உயிரின் மாத்திரை ஒன்று இருக்க, ச் என்னும் மெய்யின் மாத்திரை அரை தன்னுடைய அளவு அழிந்து அதனுடன் ஐக்கியமாகின்றது. அப்படியே, ஈ என்ற உயிர் நெடிலை உச்சரிப்பதற்கும் தீ என்ற உயிர்மெய் நெடிலை உச்சரிப்பதற்கும் வேண்டியது உயிர்நெடிலின் மாத்திரையாகிய இரண்டே அன்றி த் என்னும் மெய்யின் மாத்திரை அரையும் சேர்ந்து இரண்டரை ஆவதில்லை. உயிரும் மெய்யும் ஒலியால்மாத்திரம் பிரிந்துதோன்றி அளவால் அதிகப்படாமல் கலந்து உயிர்மெய்யெழுத்தாவதற்குப் பாலில் சர்க்கரை கலப்பதை உதாரணம் கூறலாம். பாலிலே சர்க்கரைஇட்டுக் கரைத்தால், பாலின் சுவை சர்க்கரையின் சுவை ஆகிய அவ்விரண்டின் சுவையும் அக்கலவைக்கு இருக்குமாயினும், கரைந்த சர்க்கரையின் அளவினால் அந்தப்பால் அதிகப்படுவதில்லை. எனவே அளவினால் உயிர்மெய்யெழுத்துத் தனிவகையில் ஒன்றேயாயினும் புணரிலக்கணம்வரையில், அதன் ஒலியை இரண்டாகக் கருதி விவகரிக்கவேண்டும்.

உயிர்மெய்யெழுத்து என்று, உயிரைமுதலும் மெய்யைப்பின்னுமாக வைத்து இவ்வெழுத்துக்களுக்குப் பெயரிட்டிருந்தாலும் க்+அ=க என்று ஒலி தொடர்கின்றமுறைப்படி பார்த்தால், மெய்யொலி முதலும் உயிரொலி பின்னுமாகவே வரக் காண்கின்றேம். ஆதலால், கரடி அல்லது குதிரை, பலா, என்ற சொற்களின் ஈற்றில் இருப்பது வரிவடிவில் டி, ரை, லா என்ற உயிர்மெய்யெழுத்துக்களானாலும், அவ்வுயிர்மெய் யெழுத்துக்களின் ஈற்றில் ஒலிக்கும் ஒலி கரட் இ, குதிர்ஐ, பல்ஆ, என, இ ஐ ஆ என்னும் உயிரேயாகும். எனவே ஈற்றில் வரிவடிவில் உயிரெழுத்துக்கள் இல்லையானாலும் ஈற்றில் இசைக்கின்ற உயிரின் ஒலியைக்கருதி, அச்சொற்களை உயிர்மெய் ஈற்றுச்சொற்கள் என்னாது, உயிரீற்றுச்சொற்கள் என்றே கூறுவோம். அப்படியே, நாய் அல்லது பூனை, அல்லது மரம், என்னும்போது இச்சொற்களை மெய்யை முதலாக உடைய சொற்கள் என்போம். ஏனெனில், நா என்னும் முதலெழுத்து வரிவடிவில் மெய்யெழுத்தல்லாது உயிர்மெய் எழுத்தேயாய் இருந்தபோதிலும் அதில் ந் ஆய் என முதலில் ஒலிப்பது ந் என்னும் மெய்யின் ஒலியாயிருத்தலால். அவ்வாறே பூனை, மரம் என்ற சொற்களிலும் ப், ம் என்ற மெய்யினொலியே முதலாக இசைக்கப்பெற்று, அப்புறந்தான் ஊ, அ என்ற உயிரினொலிகள் வருகின்றன.

வரிவடிவில், க், ங் போன்ற மெய்யெழுத்துக்கள் ஒன்றமே ஒருபோதும் தமிழில் மொழிக்குமுதலில் வரவே வராது. ஆகையால் மெய்யை முதலிலுடைய சொல், அல்லது நிலைமொழி முதலில் மெய் வருவது, என்று சொல்லும்போதெல்லாம் மெய்யொலியை நினைத்துக்கொள்ளவேண்டுமேயொழிய அதன் வரிவடிவைத் தேடப்படாது. வரிவடிவில் தனக்குரிய ஒலியோடும் சொல்லுக்கு முதலெழுத்தாக நிற்கவல்லன, அரசன், ஆடு, இதழ், ஈட்டி என உயிரெழுத்துப் பன்னிரண்டும், சில உயிர்மெய்யெழுத்துக்களும் ஆகும்.

சொல்லுக்கு இறுதியில் வரிவடிவில், கதவு கரடி குதிரை, நரு, என உயிர்மெய்யெழுத்துக்கள் பல நிற்கும். கண், மரம், நாய், பகல், என மெய்யெழுத்துக்கள் பல தமக்குரிய ஒலியோடு மொழிக்கு இறுதியில் நிற்கலாம். ஆனால் முன்சொன்னபடி உயிர்மெய்யெழுத்தின் பின்ஒலியாக உயிர் மொழிக்குஇறுதியாக வருமேயன்றி, வரிவடிவில் தனக்குரிய ஒலியோடே எழுத்தாக வரவே வராது.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

[690 வது பக்கத் தொடர்ச்சி]

18907

இராசசூயச் சருக்கம்.

அரிவிரசுந் துழாய்மகுடத் தரியுமிரண்
டரிகளரு ளாண்மை யோரு
மெரிவிரசு நெடுங்கான மிருதினத்தில்
விரைந்தேகி யெண்ணில் காவற்
கிரிவிரச நகரெய்திக் கிரித்தடந்தோண்
மகதேசன் கிளருங் கோயிற்
கரிவிரசுங் கோபுரப்பொற் றிருவாயில்
புகுந்துரைத்தார் காவ லோர்க்கே.

[வண்டுகள் நெருங்கி மொய்க்கும் துளவமாலையையும் திருமுடியையும் உடைய கிருஷ்ணனும், அரியென்னும் பெயர்கொண்ட இருவரான வாயுவும் இந்திரனும் பெற்ற ஆண்மையுடைய பீமார்ச்சுனரும், தீப்பொருந்திய நீண்ட காட்டை இரண்டு நாட்களில் விரைவாகக் கடந்துசென்று, கணக்கற்ற காவலையுடைய கிரிவிரசநகரை யடைந்து, மலைபோன்ற பெரிய தோள்களையுடைய மகதேசத் தரசனான சராசந்தன்வாழ்கின்ற அரண்மனையின் யானைகள் நெருங்கி நிற்கும் கோபுரத்தையுடைய மிகவும் அழகிய வாயிலில் சேர்ந்து, வாயில் காப்போருக்குத் தங்கள் வரவைத் தெரிவித்தார்கள்]

இதை பொருமுறை யோதியவுடன், செய்யுளின்னிசை செவியினிறைந்து, இன்னிசை பயின்று இன்பத்தை யளிக்கின்றது. நெடுநாளாய்த் தான் மனத்துட் கொண்டிருந்த வெண்ணங் கைகூடுமமையங் கிட்டிற்றென்று குனித்த கிருஷ்ணன், அருச்சுனனையும் வீமனையு மழைத்துக்கொண்டு கடுங்கானகத்திற் கடுகி நடக்கலுற்றான். கிருஷ்ணனுக்கு உள்ளத்திலுவகை பூத்தலால் தன்னைமறந்து விரைந்து நடக்கலுற்றான். எரியுமிழு மருஞ்சுரம் நீண்டதே யாயினும், கிருஷ்ணனைத் துணைக்கொண்டு நெடுவழியேகிய வீமார்ச்சுனரும், கண்ணன் வழிமாளச் செய்த சூழ்ச்சிகளால் வருத்தத்தைமறந்து வல்லையேகினர். அடியாருறுந் துன்பத்தைப் போக்குபவனான அரியும் இனிப் பாண்டவர்க்கு முந்துறும் பலவித விடையூறுகளையும் போக்கி, அவருக்குத் துணையாக அருகில் நின்று அமர்க்களத்திலும் அருளப்போகின்றமையால், முதன்முதலில் பாண்டவர்களால் தனக் காக வேண்டிய காரியத்தை யச்சமின்றி இந்தப்பொழுது நடத்திக்கொள்ள விரைந்தேகினான். செருமுனையினின்று வீராவேசங்காட்டி மாற்றலரைப் புறங்காணு மாற்றலுடைய வீமார்ச்சுனரும், கிருஷ்ணனுக்குதவுமுவகை யுந்தத் தங்க ளாண்மையைக்காட்டு மவாவினராய் அவனுடன் விரைந்து சென்றார்கள். அவர் ஆண்மை யுடையோ ரென்பது முன்சொன்ன அரியுடன் சேர்ந்த தேவர்குழாத்துட் கூடிய இரண்டு அரிகளாகிய வாயுவும் இந்திரனும் அருளியதாலேயே பெறப்படும். நாற்புறமும் மலைகளாற் சூழப்பட்ட மலைகளே யதற் கியற்கையரணா யமையப்பெற்றதாற் 'கிரிவிரச'மெனப் பெயர்பெற்ற வந்நகருக்கு, வேறு பல செயற்கைக் காவலு முளதாதலா லெண்ணில் காவ லெனப்பட்டது. பகைவராலெண்ணி மனத்துட் கொள்ளவு மவராற் கடத்தற்கு மியலாததாலு மது எண்ணில் காவலன்றோ? அரண்மனை முன்றிலிற் சராசந்தனைக் காணக் கூடியிருக்கு மரசர்குழாம் இவர்ந்து வந்த விபவங்களும், அன்னவ ரவற்குக் காணிக்கையாகக் கொணர்ந்த களிறுகளும், அரசர்களோடு புடைசூழ்ந்து சென்ற துணைவ ரூர்ந்துவந்த தும்பிகளும், அரண்மனைவாசிக ளேறி வெளிச்செலக் காத்திருக்கும் கைம்மாக்களும் நெருங்கிநின்ற கோபுரங் கரிவிரசுங் கோபுர மாயிற்று. வேழங்கள் யாவும் அம்பாரிதாங்கி யுள்ளும்புறமும் செல்வதற் கியைய வானுறவோங்கி வளர்ந்துநின்றதவ் வாயிலும்.

வாயிலையடைந்தபின் முனிவர் மூவர் வந்துள்ளனரெனச் சராசந்தனுக் கறிவிக்குமாறு வாயில்காப்போரை யவர்களேவினர். உட்செல்ல விடைபெறவும் மூவருமுட்சென்று மறைமுனிவர் முறைப்படி யரசனுக் காசி கூறினர். அவர்களுடைய தோற்றத்தையும், முகப்பொலிவையுந் தோளிற்காணும் விற்குறியையும் விறல்மன்னன் கண்டு, அந்தணராவீர் நீவிர் யாவிரென்று வினவினான். மூவர் பெயரையும் முகுந்தன் தெரிவித்து, மன்னனையு மவன் வளநகரையுங் காணுமவாவினால் மறைந்து வந்ததா யறிவித்தார். அரசர்க்குரிய கோலத்தோடும் முறைப்படியும்வரின் காவலைக் கடந்து வருதல் யுத்தமுறையாலன்றி வேறு வழியாலியலாததாலும், அதுதான் நெடுங்காலஞ் செல்லுமாதலாலும்முனிவராய்த்தாம்போந்தனரென்றுந் தெரிவித்தார். நெடுநாளாய்ப் போரின்றி யிருந்தமையாற் றினவுகொண்ட தோள்களுக்குச் சமர்செய்யுந் தருணங் கிடைத்ததென்று மகிழ்ச்சிகொண்ட சராசந்தனிறுமாப்புடன் இது இயம்பினான்:—

நீயெனி லாண்டோ ரொன்பதிற் றிரட்டி
நெடுஞ்சிறைக் கலுழன் முன்னெறிக்கொ
ளீயென வோடி மதுரைவிட் டாழி
யெயிற்று வாரகைப் பதிபுகுந்தாய்
நோயென வசுரர்க் குடைந்துபொற் காவி
னுழைதரு நூறு மகத்தோன்
சேயெனி னிளையன் வீமனை விசும்பிற்
சேர்த்து வனென விழிசிவவா

[நீயோ பதினெட்டுவருடம் நீண்ட சிறகையுடைய கருடன்முன் எதிர்ப்பட்டஈயைப்போல மதுராபுரியைவிட்டோடிமேற்கடலில் நிருமிக்கப்பட்ட மதில்சூழ்ந்ததுவாரகையில் குடிபுகுந்தாய்; நோயைக் கண்டதுபோல் பயந்து அசுரர்க்குத் தோற்றுத் தனது கற்பகச்சோலையில் நுழைந்தொளித்துக்கொண்ட இந்திரன் புதல்வனான அருச்சுனனோ இளையவனாயிருக்கின்றான்; ஆதலால் வீமனை விண்ணுலகிற்சேர்ப்பேன், என்றுகூறிக் கண்கள் சிவக்க]

முன்னாள் சராசந்தனுக்கும் கண்ணனுக்கும் விளைந்த போர் நெடும்போராய்ச் சடுதியில் முடிவுபெறாமல் நீடித்து வளர்ந்த சமயத்தில், யவன தேசாதிபதியான காலயவனனென்போன் கண்ணன்மேற் படையெடுத்துவர, ஏற்கனவேபோராலிளைத்திருந்த கண்ணன்இருவரோடும் பொருவதற் கிணங்காதவனாய் மதுரையைவிட்டுத் துவாரகையிற் றன் பரிவாரங்களுடனு முற்றுறவினருடனுஞ் சென்று தங்கினதைச் சராசந்தன்

சுட்டிக் காட்டினன். அஞ்சினருடன் பொருதலடா தென்று கண்ணன் நீக்கப்பட்டனன். கருடன்முன்ன ரெதிர்ப்பட்ட ஈ அவனது வலிய சிறைபினுண்டா குங் காற்றின் கடியவேகத்தாலேபே எவ்வாறு பல காவதங் கொண்டுதள்ளப்படுமோ, அவ்வாறே கிருஷ்ணனும் வலிய படையினெழுச்சியாலேபே அற்றங் கொண்டு துவராப்பதி புகுந்தன னென்பது அவனது கருத்து. 'கலுழன் முன்னேறி பேபெண வோடி', என்று பாடமிருப்பின் அதற்குக் கருடன் மேலேறிக் கண்டாரனை வருமரவையென்று ஏளனஞ் செய்யவோடி என்று பொருள் கொள்ளவேண்டும். அதுவே சிறந்த பாடமு மாதுமாயினு மது செய்யுட்கேற்ற நடையன்றெனப் பிரதிகளிற் றள்ளப்பட்டது போலும். ஆழியின்கண் நிருமிக்கப்பட்ட மதிள்சூழ்ந்த துவரை ஆழியெயிற் றுவரை. உவரியினுட் புகுந்தது வரை ஆழியையே அரணாகவுடையதால் ஆழியெயிற்று வரையுமாம்.

நோயுடம்பினுட்புக்கு விடாது வருத்தி மெலியச் செய்தல்போலச்சுரரும் தேவரை விடாது பின்பற்றிச் சென்று கண்டகண்ட விடங்களிலெல்லா முடற்றலாலவர் நோய்க்குவமை கூறப்பட்டார். விரைவிற் பிடிக்குஞ் சில நோய்களுங் கஞ்சியோடுதலியல்பாதலால், அசுரர் பெயரைக் கேட்குமுன் வெருவியோடின ரமரரென்று நகையாடினன் சராசந்தன். நோய் சிறந்த மருந்திற்குடைந்து போவதுபோல், மருந்தனைய வெமக் குடைந்துபோன விந்திரனென்று தன்னையுந் தன் கூட்டத்தாரையும் புகழ்ந்து கூறினதாகும். அசுரர்க்கஞ்சிக் கற்பகக்காவி னுழைந் தொளிக்கு மிந்திரன், அரசரைவென்று நூறசுவமேத யாகஞ் செய்ததெங்ஙனம்? அவன் சேயு மிளைஞனதலால்,வல்லமைபொருந்திய காற்றின்மைந்தனே தனக்குப் பொருதற்கேற்ற போர்வீரன்.

என்றினையன பகர்ந்து தன் மதலைக்கு முடிசூட்டுவித்துச் சராசந்தனுந் தோள்தட்டி யார்த்தெழுந்தான். இருவருக்கும் மூண்ட போரினிறுதியில் வீமனே வெற்றிகொண்டு

வாளுகிர் வாளாற் கனகனைப் பிளந்த
வண்டுழாய் மணங்கமழ் மௌலிக்
கோளரி யெனவே பிளந்தெறிந் தண்ட
கோளமும் பிளக்கநின் றார்த்தான்.

பிளந்தபிளவு மீளவும்பொருந்திப் போர்க்கெழவே வெற்றியும் வெறும் வெற்றியாயிற்று. இங்ஙனம் பலமுறைநிகழவே வீமனயர்ந்துகிருஷ்ணனை நோக்கினன். அவனுமொரு புல்லை யிருகூறாகப் பிளந்து அடிநுனி மாற்றிப் பூமியிற் கிடத்தினன். அவன் செயலைக் குறிப்பி னுணர்ந்தவீமனு மவ்வாறே யவனுடலைக் கால் தலை மாறியிட்டபின் அவனுயிர்த்தெழாம லிறந்தான்.

சந்தச் சிகரச் சந்தணியுந்
தடந்தோ ளாண்மைச் சராசந்தன்
முந்தப் பொருத மல்லமரின்
முரணோ டழிந்து முடிந்ததற்பி
னிந்தப் புதுமை தனைவியவா
வேத்தா விறைஞ்சா யதுகுலமா
மைந்தற் கொருவா சகமுரைப்பான்
மணித்தார்ப் புயவா சவன்மைந்தன்.

பதினெட்டு முதல் இருபத்தெட்டு வரையிலுள்ள செய்யுட்க ளெழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்களாய்ச் சராசந்தனுக்கும் வீமனுக்கும் நடந்த மல்யுத்தத்தைத் தெரிவித்தன. சராசந்த னிறந்தவுடன், வாசிப்போர் இதுவரையில் மற்போரின் முடிவு எதாகுமோவென்று கண்ணுங் கருத்துமாய்ச் செய்யுட்களை யோதியபின் சராசந்த னிறந்தானென்று கதைப் போக்கிற்கொண்ட வூக்கத்தைத் தளர்த்தி ஒருவிதத்திற் களிப்படைவதுபோ லிச்சந்தவிருத்தமுங் குதூகலத்துடன் குதித்தோடுகின்றது. அவ்வாறு கொங் தளிப்புக்கொண்டு தாளத்திற்கேற்பச் சந்தமமைந் திருப்பது ஓரடியில் மூன்றுஞ்சீரு மாறுஞ்சீருங் காய்ச்சீர்களாய், மற்றைய பெரும்பான்மையான மாச்சீர்களைவிட நீண்டிருக்கச் செய்யப்பட்டதால் தான். இவ்வகையான சமயத்திற்கேற்ற சந்தவேறுபாடுகளைக் கன்னபருவத்தில், யானைப்படையை விவரிக்குமிடத்தும் நாகாயுதந்தப்பி நரனுய்ந்தபொழுதும் கையாளப்படுஞ் செய்யுட்களாற் காணலாம். அவைகளைச் சமயம் வாய்த்தபோ தெடுத்துக் காட்டுவோம்.

சராசந்த னுடல மிருகூறாய்ப் பிளவுபட்டும் மீண்டு மணைந்த தேனென் றருச்சுனன் கண்ணனை வினவினன்.

கண்ணன் சராசந்தன் வரலாறுகூறி யருச்சுனனையும்வீமனையுந் தெருட்டுகின்றான். வானவர்ப் பகைவரான வசுரகுலத்திற்றோன்றியபிருகத்திரனென்போன், மகப்பேறுவேண்டிக் கௌசியமுனியை நாட,தவத்திற்சிறந்தவவனுந் தான்வாழ் சூழலிலிருந்து தானேபழுத்துக் கீழ்விழுந்த தேமாங்கனியொன்றை யவ்வசுரனுக்கு நல்கினன். அக்கனியைக் கொண்டுபோய்த் தன் னில்வாழ் மனைவிய ரிருவருக்கு மிருகூறாய்ப் பிளந்து கொடுப்ப வவ்விருவரு மோருடலிற் பப்பாதி தனித்தனியே யீன்றனர். இத்தீக்குறிக்கு வெருவிய வாசவனிருகூறான வவ்வுடலத்தை நகர்ப்புறத்தி லெறிந்துவிட்டு உற்பாதசாந்திகள் பல வூரின்கட் செய்யலாயினன். அந்நகரைக்காத் தூர்வலம் வந்த

உறைய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கரும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்

[காய்ந்த மயிரினையும், வரிசையொவ்வாத பல்லினையும், பெரிய வாயினையும், கோபத்தாற் சுழலும் விழியினையும், பசிய கண்ணினையும், அச்சத்தைத்தரும் பார்வையினையும்,பிதுங்கிய கண்ணையுடையகோட்டானோடு கூடியபாம்பு தூங்குதலினாலே பெரிய தனங்களை வருத்துகின்ற காதினையும், ஒழுங்கில்லாத வயிற்றினையும், கோபம்பொருந்திய நடையினையு முடையளாய்க் கண்டவர்களுக்கு அச்சந்தோன்றும் பேயாகிய மகள்.]

சரையென்பாள் உண்ணும்பொருட் டவ்விருகூற்றையு மொன்றுசேர்க்கப் பொருந்தியவுடல முயிர்த்தெழுந்தது. அதனையவள் அரசனுக்களித்துத் தன் பெயரிடும்படி சொல்லிப்போனாள். சரையால் பொருத்தப் பட்டமையால் அவனுக்குச் சராசந்தன் என்று பெயருண்டாயிற்று, என்று சொல்லிக் கதையைக் கண்ணன் முடித்தான்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

16. நீர்விளையாட்டுப் படலம்.

(695 பக்கத் தொடர்ச்சி)

ஈரிடத்து மேற்றுண்ட சேந்தா மரைகளே

பூக்களைக் கொய்து திரிந்தபின் புனலாடப்போவது மரபு. அவ்வாறு புனலாடப் போந்தவர் பொலிவும் விரைவும் இவ்வகை யிருந்தனவெனக் கூறத் துவக்கிய கம்பர்,

அங்கவர் பண்ணை நன்னீ
ராடுவா னமைந்த தோற்றம்
கங்கைவார் சடையோ னன்ன
மாமுனி கனல மேனாள்
மங்கையர் கூட்டத் தோடும்
வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்குபாற் கடலிற் செல்லுந்
தோற்றமே போன்ற தன்றே

[அங்கு, அவர்கள் நல்ல நீர்விளையாட்டைப் புரிவதற்கு அமைந்த காட்சியானது, முன்னொரு காலத்தில், கங்கை சொரிகின்ற சடையையுடைய சிவபிரானையொத்த பெரிய தூர்வாசமுனிவன் கோபித்துச் சபித்ததால், மங்கையர்களது கூட்டத்தோடு இந்திரனுடைய செல்வமெல்லாம் பொங்குகின்ற பாற்கடலினிடத்துச் சென்றதைப்போன்று இருந்தது]

எனப் பாடுகின்றார். இராகவன்தன் திருமணம் கருதிச் செல்வாரும் நந்தாப் பெருஞ்செல்வம் நண்ணிய வருமாய இந்நங்கையரும் நம்பிமாரும் புனலுட் புகுமித் தோற்றத்தைச் சாபத்தால் சென்றொடுங்கும் இந்திரன்திருவிற்கு இணையென உரைத்தது ஒவ்வாதெனக் கருதியோ கம்பரே பின்னர்ப் பத்துச் செய்யுள்களுக் கப்பால்,

குடைந்துநீ ராடு மாதர்
குழாம்புடை சூழ வாழித்
தடம்புயம் பொலிய வாண்டோர்
தார்கெழு வேந்த னின்றான்
கடந்தநா ளமிர்தி னோடுங்
கடலிடை வந்து தோன்றும்
மடந்தையர் சூழ நின்ற
மந்தரம் போல மாதோ.

[நீரில் முழுகி ஆடுகின்ற மாதர்களது கூட்டம் தன்னைச் சூழ்ந்திருக்கும்படி, தொடிவலயங்களணிந்த பெரிய தோள்கள் விளங்கினவனாய் அங்கு ஓர் மாலை அணிந்த வேந்தன், கடைந்த காலத்தில் பாற்கடலில் அமிர்தத்தோடு தோன்றிய வானமங்கையர் தன்னைச் சுற்றியிருக்க உயர்ந்து நின்ற மந்தரமலையைப்போல நின்றான்]

என்னுமாற்றால் அச்செல்வமக்களைக் கடலிலிருந்து மீட்டிப் பண்டைவண்ணத்த ராக்கிவிட்டார். இவ்வகை மாந்தர்திரள் புக்குப் பொய்கையுள் முழுகவே,

மலைக டந்த புயங்கண் மடந்தைமார்
கலைக டந்த வல்குல் கடம்படு
முலைக டந்தமின் முந்தி நெருங்கலால்
நிலைக டந்து பரந்தது நீத்தமே.

[மலைகளை வென்று கடந்த ஆடவர்களது புயங்களும், மாதர்களது மேகலையைக்கடந்து அகன்ற அல்குலும், அவர்களது குடம்போன்ற முலைகளும் ஒன்றோடொன்று முந்தி நெருங்குவதால், வெள்ளமானது தன்னுடைய நிலையைக் கடந்து பரவியதாயிற்று.]

இச்செய்யுள் ஈற்றடியின் தொனி முன் நாட்டுப் படலத்தில் கோசலத்தின் பெருமையை ஒழித்துக் காட்டணியின் உதவியால் விளக்குவதாய்,

நெறிக டந்து பரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே

[கோசலத்தில், நெறியைக் கடந்து செல்வன வெள்ளங்களேதான், மாதர்களது குங்குமத் தொய்யில் எழுதப்பட்டுள்ள தோள்களே குறி யழிந்தன. மங்கையரது தேயும் இடுப்பே சிறியன. வெறி கொண்டனவும் அவர்களது மலரணிந்த மெல்லிய கூந்தலே.]

என வந்துள பாசுரத்தில் கேட்டிருக்கலாம். ஆற்று வெள்ளம் செல்லவேண்டிய நெறியினின்று விலகிச் செல்வது கூறிய கம்பர், இங்குக் குளநீர் தன்னுடைய நிலையினின்று பரந்ததைக் காரணத்தோடு காட்டுகின்றார்.

பெருங்காவியங்கள், ஒன்றற்கொன்று பொருளுணர உதவியாகும் நலத்திற்கு ஓர் உதாரணம் இப்படலத்தின்கண் காணலாம். சுரமைநாட் டணிகூறிய தோலாமொழித் தேவர்,

வெண்மு ளைப்பசுந் தாமரை மென்சுருண்
முண்மு ளைத்திர ளோடு முனிந்துகொண்
டுண்மு ளைத்திள வன்ன முழக்கலாற்
கண்மு ளைத்த தடத்த கழியெலாம்

[நீர்க்கழிகள் எல்லாம், முள்முளைகளின் திரளையுடைய இளம் தாமரையின் மெல்லிய சுருள்களோடு கோபித்துக்கொண்டு, அவைகளுக்கு உள்ளே வெண்மையான முளையைப்போல் இள அன்னங்கள் தோன்றி மிதித்து உழக்குவதால் கள்ளானது மிகுதியும் பாய்ந்த இடங்களை உடையன]

என்று சூளாமணியிற் செப்பினர். என்ன முனிவினாலன்னம் முளரியை உழக்கியதென்பது அங்குத் தெரிந்ததில்லை. அம்முனிவிற்குக் காரணம் இப்படலத்தில்,

சுளியு மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி யொத்தன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
நளின மேறிய நாகிள வன்னமே

[தாமரையில் ஏறிய மிகவும் இளமையான அன்னங்கள், தமது மெல்லிய நடை தோற்கும்படி நடக்கு மாதர்களது ஒளிபொருந்திய சிறிய பாதங்களை அம்மலர்கள் ஒத்திருந்தனவென்று அவைகளைக் கோபிக்கும். கோபித்து, அந்தக் கோபம்தோன்ற அம்மலர்களை மிதிப்பன போன்றன]

என்னு மாற்றால் தற்குறிப்பேற்றமாகக் கம்பர் கற்பித்துக் காட்டுகின்றார். முனிவையேனும் அதற்குக் காரணத்தையேனும் குறிக்காமல் புகழேந்திப்புலவர், "அன்னம் மிதிப்ப அலர்வழியுந் தேறல்போய்ச் செங்நெல் விளைக்குந் திருநாடன்" என்று கூறியதும் இன்னதே. பாகொக்குந் தம் சொற்களால் பைங்

கிளியோடும் பல பேசி மலர் கொய்யும் மடவார்க்கு நடைதோற்ற அன்னம் வெள்கிப் பின்னிடைதல் கண்டு வண்டினங்கள் பரிகசித்து ஆரவாரம் செய்யும் பொழிலின் செய்தியொன்று முன் மிதிலையிற் கண்டோம். இன்னணம் பரிகசமடைந்த மடவன்னம் மாதரார் நடைக்குத் தோற்ற பரிபவப் பழியினை, நேர்முகமாகத் தீர்த்துக்கொள்ள ஆற்றுமல், நடையால் தம்மைத் தோற்பித்த அப்பாதங்களுக்கு உவமையாம் பதுமத்தை உழக்கித்துவைத்து விளிவுதோன்ற மிதித்துத் தம் சினம் சிறிது ஆறுவன போன்றன. அன்னத்தின் இளிவைக்கண்டு சிரித்தவை வண்டுக ளென்றுல், அதற்கு வேறூர் தாமரை துவைப்புண்டது. மாதரார் பாதத்தை ஒத்திருந்ததன் பொருட்டுத் தாமரைக் குற்ற கதி இது. மற்று, இத்தாமரைக்கோ இருபுறத்தும் இடி. அவைகள்தாம் முன் நகரப்படலத்தில்,

> அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்தநீள்
> கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
> முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன
> [மொய்ம்பெலாம்
> வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்தன் மானு
> [மே

[அயோத்தியின் மதிலிற்கு வெளியே சூழ்ந்திருந்த அகழியில் பூத்த வாசனைவீசும் தாமரைக்காடானது, மகளிரது முகங்களுக்குத் தனித்தனி தோல்வியுற்று ஓடிவிட்ட மலர்களெல்லாம இப்பொழுது ஒன்றுசேர்ந்த பலம்பெற்று மறுபோர்க்கு அவர்களை அழைத்தனவாய் முற்றுகை போட்டிருப்பதை நிகர்க்கும்.]

என்று காட்டியவாறு, தம்பொருட்டே சிலபழி தீர்த்துக்கொள்ள வேண்டியவைகளா யிருக்கின்றன. எனினும் இவ்விடத்திலோ,

> தள்ளி யோடி யலைதடு மாறலால்
> தெள்ளு நீரின் முழுகுசெந் தாமரை
> புள்ளி மானனை யார்முகம் போல்கிலா
> துள்ள நாணி யொளிப்பன போன்றவே.

[அலைகள் தள்ளியோடித் தடுமாறுவதால் தெள்ளிய நீரில் முழுகலாகும் செந்தாமரைகள், புள்ளிமான் அனைய மாதர் முகம்போலத் தாம் இல்லாது உள்ளம் நாணி ஒளித்துக் கொள்வன போன்றன]

எனின், மகளிர் கால்களை ஒப்பதால் அன்னத்தால் மிதிப்புண்டும், அவர் வதனத்தை ஒவ்வாததால் நாணி முழுகியும் தம்நாள் கழிக்குங் கதி பதுமத்திற்கு நேர்ந்தது.

இவ்வயின் களிப்புங் காதலுங் கைம்மிகக் காளை வீரரும் காரிகைமாதரும், சிந்தைமகிழ்ந்தும் மெய்ம்மறந்தும் பற்பலவிதங்களில் விளையாடினர். வாளை மீன் உகள வஞ்சி மைந்தரைத் தழுவினர் சிலர்; வண்டுணக் கமழுஞ் சுண்ணத்தை எதிரெதிர் தூவினர்; தொண்டைவாயிலும் புண்டரீகக்கைகளிலும் அரிவையர் தெண்ணீர்முகந்து தம் கொழுநர்மேல் இறைத்தார்; அன்னத்தைத் தம்மோடும் ஆடவருமாறு சிலரழைத்தனர்; ஒருத்தி நீருட்டிரிந்த கயல்களை நோக்கி, ஓடுநீர் தடங்கட் கெல்லாம் கண்களுண்டோ வென்று தன்கணவனை வினவினள். நீருணுட் தன்கண்ணினை நிழலைநோக்கிக் கயலென இதற்கெதிர் மயங்கினரும் வேறு சிலருளர். நீரினில் தன் உருவத்தைக் கண்ணுற்ற வொருத்தி, "நான் சிரிக்க இவளுஞ் சிரிக்கின்றுள், ஆதலின் இவள் என் தோழிபோலும்" எனத் தன்னுடைய முத்தாரத்தை கழற்றித் தன் நிழலிற்கே நல்குவாள். ஊடிச்சென்ற வொரு மாது கமலக் காட்டினிடையே ஒளிந்துகொள்ள, அன்னுள் காதலன் அவளது முகமெது மலரெது வென்று ஓராமல் திகைப்பா னொருபுறம். இடையிலிருந்த மேகலை நழுவிக் காலில்விழ ஒருத்தி பாம்புதான் சுற்றிக்கொண்டதென்று துடிப்பாள். தாமரைமேவிய திருமகளை, யானை அரசு தன் துதிக்கையால் நீராட்டுவதையொப்ப, ஒரு இளமகன் தன்னருமைத் தையலாள் கார்க்குழல்மீது நீர்முகந்து சொரியலுற்றுன்.

> மானி னேக்கியர் மைந்தரோ டாடிய
> ஆன நீர்விளை யாடலை நோக்கினன்
> தானு மன்னது காதலித் தானென
> மீன வேலையை வெய்யவ னெய்தினன்.

[மான்போன்ற பார்வையையுடைய மாதர், மைந்தர்களோடு இவ்விதம் ஆடிய நீர்விளையாட்டைப் பார்த்திருந்த சூரியன், தானும் அவ்வாறு நீர்விளையாட ஆசைப்பட்டான் போல் மீன்களையுடைய கடலை அடைந்தான்.]

எனினும் என்! தன் பின்னைபோர் பெற்ற பாக்கியம் பரிதிக்கு இலது. அவனே டுடனுட அமைந்தன மீன்களே.

அகப்பொருள் வரலாறு.

[696-வது பக்கத் தொடர்ச்சி]

MADRAS * OFFICE OF THE REG 1929

பரத்தையிற் பிரிவு

> அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடி
> இன்சொல் இழுக்குத் தரும் [யார்

என்றும்,

> வரைவிலா மாணிழையார் மென்றேள் புரையிலாப்
> பூரியர்கள் ஆழும் அளறு

என்றும்,

> இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு

என்றும் நன்றுய்த்தாணறிந்திருந்தும், மாயப் பரத்தையின் மோகவலையிற்பட்டு அறிவுத்டுமாறிய தலைமகன், கற்றறிபாங்கன் முதலிய தனது நன்னண்பர் கழறிய உறுதிமொழிகளை உட்கொள்ளாமலும், தனது மனையாட்டியின் அசையாத அன்பினையுந் தளராத கற்பினையுங் கண்டு சிந்தைதெளிந்து திருந்தாமலும், நாளுக்குநாள் அவளிடத்திலே அதிமோகமுற்று அயர்ந்து மயங்கி வடுநீங்கு சிறப்பிற்றன் மனையகமறந்து விடுதலறியா விருப்பினனுகி, அவள் வீட்டிலேயே நெடுநாள் தங்கிவிட்டான். தங்கியிருந்தவன், பழிக்குநாணி முதன்முதல் தன் பரத்தைமையைப் பிறரறியாதவாறு மறைத்தொழுகினனயினும், பிறகு மெல்லமெல்லக் கூச்சந்தெளிந்து அச்சநீங்கித் தன் காதற்பரத்தை

யுடன் தேரேறிப் பலரறியச் சென்று தேவர்திருவிழாக் காணவும் புனலாடவுஞ் செல்வானுயினன்.

இவ்வாறிவன் ஒழுகக்கண்டு ஊரெல்லாம் இவனை இகழ்ந்திழித்துரைக்கக் கேட்டுத் தன்கணவன் குறையக் குறைவாள் முன்னையினும் மனமிகநொந்து தளர்ந்து வருந்துவாளாயினள்.

இவ்வாறிவள் வருந்தி இருந்துழி,

> நேரிழை மனைவி பூப்புறு காலை
> நீரா டியபின் ஈராறு நாளும்
> கருவயிற் றுறாஉங் கால மாதலின்
> மருவியே அவளுடன் மகிழ்நன் உறைக

என்றே முன்னேர் விதித்தனராதலின், இதனைத் தலைவனுக்குணர்த்தி அவனை அழைத்துவரும்படி அக்கால வழக்கப்படி சேடியொருத்தியைச் செம்பட்டுடுத்திச் செஞ்சாந்தணிந்து செவ்வலர்சூட்டிச் செம்மணிக்கலன்கள் புனைந்து தலைமகள் தமரவர் பரத்தை மனைவயின் விடுத்தார். செவ்வணிக்கோலத்தோடு தன் மனைவாயிலில் வந்துநின்ற சேடியைக் கண்டு உண்மையை உணர்ந்த பரத்தை முந்தி அவளையும் அவளை அனுப்பியவரையும் பலவாறு வாய்வந்தன கூறி வைதிகழ்ந்து பிந்தி, உலகியலை நோக்கி,

> நெல்லுக மெய்ந்து கருமேதி நீங்கும் வயலூர,
> செல்லுக, வானுபர் கற்பினள், நாளுந் திருந்தறமே
> வெல்லுக என்பவள்பூத்தனளாம்விடைகொண்டிடுக,
> புல்லுக பன்னிரு நாளுமப் பாலிங்குப் போதுகவே

என்றுஅவனை விடைகொடுத்து வீட்டுக்கனுப்பினுள். வீடு நோக்கித் தலைவன் மீள்வதை முன்சென்று அச்சேடி பாங்கிக்குரைப்ப அவளும் விரைந்துட்சென்று தலைவிபையுற்று,

> கரும்பிகழ்ந் தேவெங் கடுத்தின் விலங்கினிற்
> கைத்திறைவர்
> விரும்பின ரேனுமன் பில்பொது மாதரை,
> மீண்டனரப்
> பெரும்பிழை நோக்கல், பிணைவிழித் தேமொழி
> வாங்கமைத்தோள்
> அரும்பிள மென்முலை யாயெதிர் கோடல்
> அழகுனக்கே.

என்று தெருட்டினள். தெருட்டலும்,

> வந்தான் வயலணி யூர னெனச்சின
> வாண்மலர்க்கண்
> செந்தா மரைச்செவ்வி சென்றுசிற் றம்பல
> வன்னருளால்
> முந்தா யினவிய ஞேக்கெதிர் நோக்க
> முகமடுவின்
> பைந்தாட் குவளைகள் பூத்திருள் சூழ்ந்து
> பயின்றனவே.

பலரும் பரவப் பனிமலர்க் காவும் பழனமுஞ்சென்றுலவுங் குரிசி லொருதனி யேவந் தொளிரிழையாள் இலகுந் திருமனை எய்துமுன் எவரு மிணையில்லா மலர்மென் குழலி மனந்துனி மாறி மகிழ்வுற்றதே.

என உழையர் வியந்துவந்து கூறுமாறு அவள் தன் சீற்றந்தவிர்ந்து முகமலர்ச்சியோடு எதிர்சென்று,

> அடுத்தார்க் களிக்கும் வியனெழில் மார்பின்
> அலர்பலவும்
> தொடுத்தார் புனைதார் துயல்வரு வள்ளால்
> துயரத்தென்னைப்
> படுத்தார் பணிந்துநா னிரத்தலும் உள்ளம்
> பரிந்துன்னை
> விடுத்தாரம் மாதரும் பல்லூழி வாழ்கவிம்
> மேதினிக்கே

என்று வஞ்சப்புகழ்ச்சி இன்மொழி கூறி மனையகத்தழைத்துச்செல்ல, பண்டு பலகாலம் வாயில்பெறுது கடைவாயில் நின்றுணங்கிய தலைமகன் தன் கடிமனைப்புகுந்து மகிழ்வுற்றுன். நெடுநாட்பிரிந்து நீங்கிய தலைமகன் தன் காதலியிடத்து ஆராக்காதல் கொண்டு அவளைப் புலவிதீர்த்து அன்பெழச்செய்து இன்புற மருவி இருவரும்

> யாமமும் பகலுமோர் ஈறின் றென்னலாய்த்
> தாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினர்.

புன்கழியின் நீராடிப் புலவுற்ற புலையன்னம் கங்கை நன்னீராடித் தேசுற்றுக் களித்தாங்கு, பொன்விலை மாதர் புன்னலந்தோய்ந்த தலைமகன் தனது இன்னுயிர்க்காதலியின் நன்னலந் துய்த்ததை

> வானும் புகழும் வடமீ னனையாள் மடப்பிணையும்
> மீனும் புரையும் விழியாட னைந்த வெள்ளத்திடை
> யானும்புகுந்தினிதாடப்பெற் றேனின்பிதனினெவன்?
> தேனும் புளித்துக் கரும்புங் கசந்திடத் தித்தித்ததே

என்று பாராட்டிக் களித்தான்.

இவ்வாறு தலைமகனுந்தானும் ஓரமளிக்கண் இன்பந்துய்த்திருந்துழிக் கலவியின்பம் பின்னும் நலமிகும் பொருட்டுக் காதல் கைம்மிகுந்த காதலி அவன் மாட்டுப் புலத்தற்குப் புதுக்காரணம் யாதொன்றுமின்மையால் நுண்ணியதோர் காரணத்தை உட்கொண்டு அதனை அவன் மீதேற்றி ஊடலுற்றுத் தலைமகன் "இம்மைப்பிறப்பில் யானினிப் பிரியலன் நின்னை" என்றுனுக, அவள் களகளவென்று கண்ணீருகுத்து, "அப்படிக்காயின், மறுமைப் பிறப்பின்கண் என்னைத் தாம் பிரிந்திடுவீர் போலும்" என்று பிணங்குவாள்:

> இம்மைப் பிறப்பிற் பிரியலன் என்றுனுக்
> கண்ணிறை நீர்கொண் டனள் ;

ஒருசமயம் அவன் தும்மினுனுக, முந்தித் தன்னையறியாது அவனை வாழ்த்தி, உடனே "உம்மை நினைத்து வருந்துகின்ற மகளிர்தம்முள் எவள் நினைத்தலால் இப்பொழுது நீர் தும்மினீர்" என்று புலந்தழுவாள்:

> வழுத்தினள் தும்மினு னுக ; அழித்தழுதாள்
> யாருள்ளித் தும்மினீ ரென்று.

இவ்வாறவள் புலத்தல்கண்டு மறுபடியும் தும்மல் தோன்றியவழி அவன் அதனை அடக்கிக்கொள்ள, அதனையும் பொறுது, "உமது காதற்கினியார் உம்மை நினைத்தலை நானறியாமல் மறைப்பதற்கோ இவ்வாறு நீர் செய்தீர்?" என்று மறுபடியுங் கண் செவந்தழுவாள்:

> தும்முச் செறுப்ப அழுதாள், நுமருள்ளல்
> எம்மை மறைத்திரோ என்று.

இவ்வாறும் பிறவாறும் பலகாற் கலுழ்ந்து புலந்துநைந்த நங்கையை நம்பியும் இனியனபுகன்று தலையளிசெய்து ஞெமுங்கப்புல்லி ஊடலைத்தீர்த்து,

> உள்ளத் துவகை ஒருதலைப் பட்ட இருதலைப்பைம்
> புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்தவின்ப
> வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர் மெய்மற
> வள்ளக் கமல வளவய லூரனும் மாதருமே. [ந்து

[இவ்வூடல் தலைமகன் செய்த குற்றங்குறித்துத் தலைவியிடத்துத் தோன்றிச் சிறிதுநேரம் நின்று, தலைமகன் தெளிவிக்கத் தீரும். அதனுலிது "உணர்த்தஉணரும்ஊடல்" எனப்படும்.]

அண்ட புராணம்

இதுவும், இனி இப்பத்திரிகையில் வரும் வேறு சில பகுதிகளும், 'கர்க்கியர்' என்னும்பேருடைய புலவரால் இயற்றப்பட்ட 'அண்டபுராணம்' என்னுமோர் நூலைச் சேர்ந்தவை. எனக்குக் கிடைத்த இந்நூலின் பழைய ஏட்டுப்பிரதி சிதைவுற்றுத் தொடர்பற்று முறைபிறழ்ந்து கிடந்தமையால், அதை ஒய்வுநேரங்களில் பரிசோதிக்கையிற் சில படலங்களே பூர்த்தியாக அகப்பட்டன. இவற்றைப் படித்துப்பார்க்கையில் பாடல்கள் பழையனவாகவும், இதிற் கூறப்பட்ட விஷயங்கள் தற்கால நிலைமைக் கேற்றனவாகவும், இக்காலத்தில் புதியனவென்றும் பரதேசத்தனவென்றும் நாம்கருதும் பல பொருள்கள் பண்டைக்காலத்திலே இந்நாட்டிலிருந்தனவாகவும் காணப்பட்டமையால், யாவரும் படிக்க விரும்புவாரெனக் கருதி இந்நூலை அச்சிட்டு வெளியிட விரும்பினேன். விரும்பி, இந்நூலின் மற்றப்பாகங்களுமடங்கிய முழுப்பிரதி ஏதாவது கிடைக்குமோவென்று முயன்றுதேடியுங் கிடைக்கவில்லை. ஆகையால் கிடைத்தபகுதிகள் இவற்றைமட்டும் இப்பொழுது இப்பத்திரிகையில் வெளியிடுகின்றேன்.

T. S. இராமச்சந்திரன், மைலாபூர்.

காபிச்சிறப்புப் படலம்

பூவிலோங்கு மயனைநிகர் புனிதனடி பணிந்தவரும்
காவிலோங்கு மலருடைய காபியதன் தோயமதை
ஆவிலோங்கு பாலுடனே யருந்திடுவ தென்னெனவே
நாவிலோங்கு மறையுடைநற் காசிபனு நயந்துடனே. 1

வான்றனிலே வழங்கிடுமவ் வமுதினிலு மினிதாக
தோன்றிடுநற் காபியதன் தோற்றமதை யுலகிற்கோர்
சான்றெனவே நின்றிடுமப் பரமன்முனம் சாற்றியதை
நான்றெரிந்த படியுரைப்பென் கேண்மினென நவிற
[லுற்றான்.

மந்தரத்தை மத்தாக்கி மாசுணத்தைக் கயிறாக்கி
அந்தரத்தி லமரர்களு மவுணருமுன் கடல்கடைய
வந்ததொரு நல்லமுதை வானவர்க ளருந்திடவே
செந்திருவி னுயகனுஞ் செய்திட்டா னொருமாயம். 3

மாலவன்செய் மாயமதற் கழுங்கியதோர் மனத்தினராய்க்
காலனைமுன் காய்ந்திட்ட கழலுடைய கடவுளவன்
பாலணைந்து பணிந்திறைஞ்சிப் பழங்கண்ணோ டவுணருமே
ஓலமிட்டே யுரைத்திட்டா ருற்றபரி சனைத்தையுமே. 4

பணிந்தவர்க ளுரைத்தவெலாங் கேட்டந்தப் பண்ணவனும்
திணிந்தசடைப் புனலினொடு மதியசையச் சிரந்துளக்கி
அணிந்தபுக ழமுதினுமிக் கினிதெனவே அறிவுடையோர்
துணிந்தபொரு ளுணர்த்திடுவென் றுயரொழிமி னென
[மொழிவான்.

கடல்கடையுங் காலத்திற் கலந்திடுபல் லோடதியாற்
கடுகியெழு கபிலநிறத் தோயமதைக் கண்டமரர்
கடுவெனவே வெருவிமனங் கலங்கியிட வானதன்றன்
திடமறிந்தே யருந்தினென்மற் றுமையவளுந் திகைத்
[திரங்க.

அருந்தியதோ ரளவினிலே யகந்தரொடு மயர்வொழிந்து
பொருந்தியதோர் மனவலியும் புயவலியும் பொலிவெய்தி
இருந்தனெனப் பொருளினைநீர் எய் தும்வகை இயம்பிடுவன்
இருந்துயர மொழிந்திடுமின் னெனமொழிந்தா னிறையவ
[னும்.

வாங்கியதை நானருந்து மமயத்தில் வாய்மிகுந்து
நீங்கியதோர் சிறுதிவலை நெடும்பிலத்தி னுட்புகுந்து
ஓங்குதவக் கபிலனுறை யொண்வனத்தி லும்பர்கணம்
ஏங்கிடவே யின்கனியா ரெழிற்செடியா யெழுந்ததால்8

விளங்குமதன் வித்தைநிறங் கருகாமல் வறுத்திடித்து
வளங்குறையா தூறவைத்துச் சாரமதை வடித்தெடுத்துக்
களங்கமறு பசுவின்பால் வேண்டளவு கலந்தளவி
உளங்களிக்க உண்டிடவே உற்றிடுவீ ருயர்நலங்கள். 9

மற்றுமிதன் மாசத்தி வளம்பெருகி வலியுறவே
உற்றுதவு மொருமனுவாம் உயர்பலையை உணர்த்திடுவென்
குற்றமறக் குறிக்கொண்டக் காபியைநீர் குடித்திடுமுன்
சொற்றிடுவீ ரெனவுரைத்தத் தூமறையு முவந்தளித்தான்10

எனவுரைத்த வீசனிணை யடியிறைஞ்சி யெழுந்தவுணர்
மனமுவந்தப் பலையென்னு மாமனுவை மனத்தாக்கி
முனிவரனற் கபிலன்றன் முனங்குறுகி முறையிரந்து
கனமிகுந்த காபியினல்விதையொன்று கைக்கொண்டார்11

வேறு

[ணிப்
கொண்டதோர் விதையி னோடுங் குடதிசை யதனை நண்
பண்டையோர் பகர்ந்த வண்ணம் பயிர்செய்து பயன தாகக்
கண்டதோர் காபி யாலே கரையிலா விறலுங் கூடி
அண்டர்கள் வெருவும் வண்ண மமர்பல வாற்றி னரே. 12

அன்னதோர் காலந் தன்னில் அரக்கர்கட் கிறைவனான
சென்னியோர் பத்தி னோனும் செறிகழற் றுணைவ ரோடு
முன்னியே யவுணர் தம்மை முரண்கெட முருக்கி வென்று
உன்னியோர் மறையி னோடு காபியும் ஒருங்கு கொண்டான்

கவர்ந்துகொண் டவர்க ளெல்லாம் காபியை யருந்திநாளும்
உவந்தன ருறக்கம் நீங்கி நிசிசர ராகி மற்றைப்
பவந்தனை யொழித்திட் டோர்கள் பயப்படப்
[பண்ணிப் பொல்லா
அவந்தனை யகில மெல்லாம் அரற்றிட வாற்றி னனே.

நாள்பல கழிந்த பின்னர் நளிர்கடற் கிறைவ னுளும்
நீள்குட திசையை நேர்ந்து நெடுந்தவங் குசிக னுற்ற
வாளர வணிந்த வீசன் வந்தவ னெதிரே தோன்றிக்
கோளிலாக் காபியோடு விஞ்சையுங் கொடுத்திட் டானே.

குசிகனுங் காபி யாலே கோபமும் பிணியும் நீங்கி
இசைதரு வனத்தைநண்ணி யியற்றிடு வேள்விதன்னை
நிசிசர ரிடையே புக்கு நிகழ்த்திடை யூறு கண்டு
தசரதன் தனையர் தம்மைக் கொணர்ந்தன னவரைக்
[கொல்ல.

வந்தவக் குமரர் கட்கு வருத்தமு மயர்வும் நீங்கத்
தந்தனன் காபி யோடும் பலையெனுந் தாவில் விஞ்சை
அந்தரத் தமர ரேபோ லவருங்கண் ணிமைத் திடாது
சொந்தமாம் வேள்வி தன்னைச் சோர்வறக் காத்திட்டாரே.

மந்திரத் தோடு மீங்குக் காபியு மல்கு நாளில்
அந்தரத் தமரர் தாமும் அச்சமோ டவல மெய்தித்
தந்திர மியற்ற லாலே தரைமிசை மாந்தர் யாரும்
மந்திர மறந்து வெற்றுக் காபியை மாந்த லுற்றார்.

கண்ணகன் பாத லத்திற் கபிலன்றன் வனத்து தித்து
நண்ணிய கபில மான நிறமுற்றுக் காபி யென்றே
மண்ணுளோர் பகர்ந்துமாந்தி வாழ்ந்திடு மிதனை யுண்ண
விண்ணுளோ ரேக்கறுத்து வெறுத்திட்டா ரமுதந்தன்னை.

பருகினோர் தூக்கந்தாகம் பசிகளைப் பாற்றி நீக்கும்
திருகுவெங் கோபத்தோடு தாபத்தைத் தணியச்செய்யும்
பெருகுநல் லூக்கத் தோடு பெருவலி யுடலுக் கீயும்
தருகனித் தருவி லிந்தச் செடிநிகர் தருவு முண்டோ. 19.

இன்னதா மியல்பிற் றுகும் காபியின் சரித மித்தைப்
பன்னுவோர் படிப்போர் மற்றுப் பரிவுடன் கேட்போர்
[தாமும்
மன்னராய் வாழ்ந்து பின்னர் வான்பதம் பெறுவ ரென்றால்
அன்னதை யருந்து வோர்தாம் அடைபய னளக்க லாமோ.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுள தென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ 1-0-0 தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர், பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம் ...	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம் ...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,

Nungambakam, Madras.

வர்த்தமானம்

ஸர் வில்ப்ரேட் லாஸன் என்னும் பிரபல ஆங்கிலேய மதுவிலக்குப் பிரசாரகருடைய நூறாவது பிறந்ததினம் சென்றவாரம் லண்டனில் கொண்டாடப்பட்டது. பார்லிமெண்டு மெம்பர்களும், மாதர் மதுவிலக்குச் சங்கத்தினரும் அவர் கல்லறைக்கு மாலை போட்டனர்.

***

இந்தியா சட்டசபையில் வாதத்திற் கெடுத்துக் கொள்ளப்பட்ட விவாக வயது மசோதா, 19உ வரையில் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றது. சென்றவாரம் சென்னையில் ஸர். சிவஸ்வாமி ஐயரவர்களது தலைமையில் கூடிய கூட்டத்தில், ஸ்ரீ. ராமதாஸ் பந்துலு, திவான்பகதூர் டி. ரங்காசாரியார், ஸ்ரீமான் T. R. சேஷய்யங்கார், ஸ்ரீ. T. R. வெங்கடராம சாஸ்திரியார் முதலானவர்கள் அம்மசோதாவின் கொள்கையை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

***

ஸ்ரீமான் யதுநாத சின்ஹா என்பவர், தான் எழுதியவைகளிலிருந்து சில விஷயங்களைப் புருபொஸர் ராதாகிருஷ்ணன் தன்னுடையதாகப் பிரசுரஞ்செய்துவிட்டாரென்று "மாடர்ன் ரெவ்யூ' என்னும் பத்திரிகையில் எழுதினரென்றும், அதை வைத்துக் கொண்டு அப்பத்திரிகை ஆசிரியர் அவதூறாகத் தலையங்கம் எழுதிவிட்டாரென்றும் கூறிப் புரபஸர் ராதாகிருஷ்ணன் அவ்விருவர்மீதும் லக்ஷ ரூபாய்க்குநஷ்டஈடுவழக்குக் கல்கத்தா ஹைகோர்ட்டில் தொடர்ந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

***

சர்தார் வல்லபாய் பெடேலைச் சென்னைத் தென் மகாராஷ்டிர ரயில்வே உத்தியோகஸ்தர்கள் சில தினங்களுக்குமுன் வரவேற்றுப் பெரம்பூர் ரயில்வே தொழிலாளர் முன்னிலையில் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அச்சமயம் பெடேல் அவர்கள், தொழிலாளர்களுக்குச் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"உங்கள் சங்கத்தின் நிலைமை இன்னதென்று சரிவர அறியேனுகையால் நானுங்களுக்குப் பொதுவாகவே சிலவிஷயங்கள் சொல்ல வேண்டியவனுயிருக்கின்றேன். உங்களைப் பார்ப்பதிலிருந்து நீங்கள் ஓர்க்ஷாப்பில் தாழ்ந்த வேலையிலிருப்பவர்களென்று எண்ண வேண்டியிருக்கின்றது. உங்கள் நிலைமை மிகவும் பரிதாபகரமானதே. உங்கள் கார்யாலய நிர்வாகத்தில் ஒழுங்கில்லாமையால் நீங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றீர்களென்று எனக்குத் தோன்றுகின்றது. படிப்பெழுத்துத் தெரியாத தொழிலாளரை ஒற்றுமைப்படுத்தி நடத்துவது சுலபமன்று. இதனால் உங்களுக்குப் பற்பலசமயம் தீமையே நேரினும் நேரலாம். இச்சமயம் இங்கிலாந்தில் கவர்ன்மெண்டை நடத்துபவர் உங்களைப்போன்ற தொழிலாளர்களின் பிரதிநிதிகளேயாவர். இப்பொழுது கவர்ன்மெண்ட் அவர்களுடையது ஆனாலும் அவர்களும் முதலில் உங்களைப் போல்தான் இருந்தனர். அவர்கள் இவ்வித பதவிக்கு வந்தது அவர் படிக்கக் கற்றுக்கொண்டதாலும்கட்டுப்பாடுடையவர்களாய்உழைத்ததாலுமேகூடியதாயிற்று. இவைகளை நீங்கள் இனிமேல்தான் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றீர். ஒற்றுமை மாத்திரம் உங்களுக்குள் இருந்தால் யாரால்தான் உங்களைக் கலைக்கமுடியும்! நீங்கள் மெய்வருந்தி உழைப்பதால்தான் இந்த மில்களும் ஓர்க்ஷாப்புகளும் ஓடுகின்றன. ஆகையால் சந்தோஷமாக வாழ்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் ஒன்றுபட்டுக் கட்டுக் கலையாமல் நின்றால்தான் இந்த உரிமையை உங்களால் காப்பாற்றிக் கொள்ள இயலும். உங்களை மோசம்செய்து கெடுத்துவிடுவது மிகவும் எளிது. உங்கள் சங்கநிர்வாகிகள் உங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாயிருத்தல் நலம். ஆனால் அந்த நிர்வாகத்திற்கு வேண்டிய திறமை தொழிலாளர்களுக்கு இல்லாததால் வெளியாரைக்கொண்டு உங்கள் காரியங்களை நடத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். ஆனாலோ, சுயநயம் மிகுந்த சிலர் உங்களைக்கொண்டு தங்களுக்கே நலங்களை நாடிக்கொள்வர். அப்படிப் பட்டவர்களாயிராமல் யோக்கியர்களா யிருப்பவர்கள் உங்கள் சங்கநிர்வாகத்திற்குக் கிடைத்திருப்பார்களானால் அது உங்கள் அதிர்ஷ்டமே. வேலை நிறுத்தம் உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு. ஆனால் நலந்தீமைகளை ஆர அமர யோசியாமல் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது. அதிகாரிகளிடம் நியாயத்தை எடுத்துக்கூறி உங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளக் கூடுமாயின், அப்படிச் செய்துபார்க்காமல் வேலைநிறுத்திவிடுவது உசிதமன்று.எனினும் எப்பொழுதுவேண்டுமானாலும் வேலையை நிறுத்திவிடக்கூடிய பலமுடையவர்களாய் நீங்கள் ஒற்றுமையோடு நின்றிருத்தல் நேர். அப்பொழுதுதான் உங்கள் குறைகள் நிவர்த்தியாகும். தொழிலாளர் சட்டமொன்று ஆசாங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். மேலும் தொழிலாளர் நிலைமையை விசாரிக்கும்பொருட்டு ஒரு கமிஷன் ஏற்படப்போகின்றது. அதனால் உங்களுக்கு நியாயம் கிடைத்தாலுங் கிடைக்கலாம்; கிடைக்காமற் போயினும் போகலாம்; நிச்சயமில்லை. ஆகையால் அதனை நீங்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை; நீங்கள் செய்ய வேண்டிய வேலையிலேயே முழுகவனத்தையும் செலுத்துங்கள், சங்கத்தை விர்த்திசெய்து வலியதாக்கிக் கொண்டு நீங்கள் வேலை நிறுத்தத்திற்கு எப்பொழுதும் சித்தமாயிருக்கவேண்டும். ஆனாலும் கடைசிவரையில் பார்த்து வேறுவழியில்லை என்று தெரிந்த பின்தான் வேலை நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தும்போது யாருக்கும் எவ்விதக் கெடுதியும் செய்யப்படாது. எந்திரங்களைக் கெடுக்கப்படாது. பிரயாணிகளை வருத்தப்படாது. பொது ஜனங்களின் ஆதரவில்லாமல் உங்கள் வேலைநிறுத்தம் ஒன்றும் பயன்படாது; ஆகையால் அவர்களுக்கு ஒருவித இடையூறும் செய்யப்படாது."

இதன்பின் மதுவிலக்கவேண்டும்என்றும் கதர்கட்ட வேண்டுமென்றும் வற்புறுத்தித் தன் உரையை முடித்தார்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

189071

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் **கலா நிலயம்** செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீட்ஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
	ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)